பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 01 ஞாயிற்றுக்கிழமை 15.01.2023 கதிர் 70






காலைக்கதிர்
Kalaikkathir

# இனப் பிரச்சினை தீர்வு குறித்த பேச்சுக்கள் ஆரம்பித்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் தெரிவிப்பு



'இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருக்கின்றமை வரவேற்கத்தக்க ஒன்று. இந்த பேச்சுக்களில் தமிழ்த்தரப்புக்கள் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் இருக்கும் வகையிலும் சிங்களத் தலைமைகள் ஓரளவு நேர்மையாக இருக்கும் எனப் பரவலாக எண்ணப்படுகின்ற வகையிலும் நல்லது நடக்கும் என நம்புவோம்'

இவ்வாறு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

தைப்பொங்கல் விழா வாழ்த்துச் செய்தியில் ஆயர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு –

பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் ஒரு விழா. தமிழ் மக்கள் கொண்டாடும் இந்த நன்றியின் பெருவிழாவை உலககெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் 2023 ஆம் ஆண்டில் கொண்டாடும் வேளை இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

இந்த நன்றியின் பெருவிழாவை இறைவன் – இயற்கை, அயலவர் என்ற மூன்று நிலைகளில் கடைப்பிடித்துக் கொண்டாட நாம் அழைக்கப்படுகிறோம்.

இறைவன் நம்மைப் படைத்து – பாதுகாத்து – அன்றாடம் பராமரித்து வழி நடத்தி வருகிறார். எமது அன்றாட அனைத்துத் தேவைகளிலும் தேடல்களிலும் அவரே முதலாகவும் முடிவாகவும் இருக்கிறார். இறைவனின் இந்த அளப்பரிய மாபெரும் செயலுக்காக இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

இயற்கை என்றும் எம்மோடு இணைந்திருக்கிறது. இயற்கையைப் பகைத்து நாம் வாழ முடியாது. இயற்கை அனைத்து நிலைகளிலும் எமக்குத் துணை புரிகிறது. நிலம் எம்மைத் தாங்குகிறது. எம்மை வாழ்விக்கும் நீரைத் தருகிறது. நாம் உண்ண நல்ல விளைச்சலைத் தருகிறது. இயற்கையை நேசியுங்கள். இயற்கையோடு இணைந்து வாழுங்கள். மரங்களை நடுங்கள். இயற்கைச் சூழல் மாசடையாமல் பாதுகாருங்கள்.

எம்மோடு வாழும் மனிதர்கள் அனைவரும் இறைவனின் படைப்புக்கள். அவர்கள் எம்மோடு வாழ இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் அனைவரோடும் நல்ல உறவைப் பேணுங்கள். அவர்கள் அனைவரையும் அவர்கள் நிலைகளில் வைத்து நன்கு புரிந்து கொள்ளுங்கள். அவர்களின் மனித குணங்களோடு அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்ளுங்கள். வாழும் குறுகிய காலத்தில் அனைத்து மனிதர்களையும் மகிழ்வியுங்கள். நீங்கள் சந்திக்கும் மனிதர் மனதுகள் மகிழ்ச்சியால் பொங்கட்டும்.

இலங்கை நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று இவ்வாண்டு 75 ஆண்டுகள் நிறைவாகின்றன. பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில், முழு வளர்ச்சி அடையாத நாடாக இலங்கை நாடு இருக்கிறது எனக்கணிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று பத்தாண்டு காலப்போர் நிகழ்ந்து ஏறக்குறைய 13 ஆண்டுகளாயும் இன்னும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வு ஏற்படவில்லை என்பது வேதனையானது.

அண்மைக் காலத்தில் திரும்பவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருக்கின்றமை வரவேற்கத்தக்க ஒன்று. இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேச்சுக்களில் தமிழ்த்தரப்புக்கள் மிக கவனமாகவும் அவதானமாகவும் இருக்கும் வகையிலும் சிங்களத் தலைமைகள் ஓரளவு நேர்மையாக இருக்கும் எனப் பரவலாக எண்ணப்படுகின்ற வகையிலும் நல்லது நடக்கும் என நம்புவோம்.

இந்தப் பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில், நிரந்தரத் தீர்வையும் ஏற்படுத்த தமிழ் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன் வேண்டுகிறோம்.– என்றுள்ளது.












காலைக்கதிர்
Kalaikkathir

**இது இரகசியம் அல்ல!**

என் செய்தியாளர் பெரும் குறும்பர். ரெலோ, புளொட் தரப்பினரின் நேற்று முன்தினம் நடந்த கூட்டம் குறித்து 'சைவ ஹோட்டல்', 'மிலிட்டரி ஹோட்டல்' என்று அவர் பாகுபடுத்தியமையை நேற்றுக் குறிப்பிட்டு இருந்தேன்.

அவரின் ☞2

# ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டணி; அலட்டிக்கொள்ள விரும்பவில்லை!

## தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவர் என்கிறார் சம்பந்தன்

**பல கட்சிகள் உருவாகலாம், கட்சிகளைப் பயன்படுத்தி பல கூட்டணிகள் - கூட்டமைப்புக்கள் அமையலாம். ஆனால், தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி எது என்பதைத் தேர்தலில் மக்கள் தங்கள் வாக்குகளால் நிரூபித்துக் காட்டுவார்கள். எனவே, 5 தமிழ்க் கட்சிகளைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நேற்று உருவான புதிய கூட்டணி தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.** ☞13



## 69 இலங்கையர்களுடன் படகு பிரெஞ்சுப் படைகளால் மீட்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.15

பெண்கள், குழந்தைகள் அடங்கிய 69 பேருடன் வந்த இலங்கை அகதிகளது மீன் பிடிப்படகு ஒன்றை ரியூனியன் தீவுக்கு அருகே பிரெஞ்சுப் படையினர் மீட்டிருக்கின்றனர். கடற்படையின் ஜொந்தாமேரி (gendarmerie maritime) படையினரால் நேற்று சனிக்கிழமை ☞13


## ரி.சி.ரி. நிறுவனரும் தேர்தல் களத்தில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.15

ரி.சி.ரி. நிறுவனர் வாமதேவா தியாகேந்திரன் எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளார். ☞13


## பொங்கல் தினத்தில் மக்களை ஒன்றிணைய ரணில் அழைப்பு



தமிழர்கள் கொண்டாடும் உழவர் திருநாளான தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழ்த்து தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். விவசாயத்துடன் தொடர்புடைய தைப்பொங்கல் பண்டிகையின்போது, அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஆசீர்வாதம் வேண்டி ☞13

## போராளிகளின் தியாகங்களைக் கொச்சைப்படுத்த விக்கிக்கு அருகதை இல்லை என சிவாஜி காட்டம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.15

ஜனநாயகப் போராளிகள் கட்சி மீது தேவையில்லாத விமர்சனங்களை முன்வைக்கவேண்டாமெனத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணிக்கு தன்னை ☞13

## மயிலிட்டியில் போராட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.14

இந்த மண்ணில் பிறந்த எமக்கு எமது சொந்த இடங்களை தருவதற்கு அரசாங்கம் ஏன் பின்நிற்கின்றது என மயிலிட்டி மக்கள் ☞13

## உயர்தரப் பரீட்சையை ஒட்டி 1 மாதம் மின்வெட்டு இல்லை

இந்த ஆண்டு கல்விப் பொதுத்தரா தர உயர்தரப் பரீட்சையின் போது ஒரு மாதகாலத்திற்கு மின்வெட்டு இருக்காது என ☞13

## ஸ்ரீ ரங்கா தலைவராக தேர்வானார்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் புதிய தலைவராக ஸ்ரீ ரங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தல் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிலையில் அதில்ஸ்ரீரங்கா27வாக்குகளைப் பெற்று வெற்றிப் பெற்றுள்ளார்.

## 10 மாதங்களில் 42,700 போதை மருந்துகள் ஒரு மருந்தகம் மூலம் வவுனியாவில் 'சப்ளை'!

வவுனியாவில் ஓர் தனியார் மருந்தகத்தில் மாத்திரம் 10 மாதங்களில் 42,700 போதை மருந்து கப்ஸூல்கள் கொள்வனவு செய்து விற்கப்பட்டுள்ளமை பாரிய குற்றம் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் சில மருந்தகங்களில் போதை மருந்து கொள்வனவு ☞13




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்பே குழப்பத்தில்!

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை ஐந்து கட்சிகள் தம்பாட்டில் பயன்படுத்துவது என்பது தவறானது. அது பற்றிய முடிவை தமிழ் மக்களே அளிப்பார்கள். அதற்கு நீண்ட நாள்கள் பார்த்திருக்கத் தேவையில்லை. இந்த உள்ளூராட்சி தேர்தலிலேயே மக்களின் முடிவு வந்துவிடும்.” – இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.**

**அவரின் தகவலின்படி –**

**வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை தனித்தனி கட்சிகளின் பெயரில் அணுகுவது என்ற முடிவை கொழும்பில் சம்பந்தரின் இல்லத்தில் பங்காளி கட்சிகளான இலங்கை தமிழரசு, புளொட், ரெலோ ஆகியவை எடுத்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை எந்தத் தரப்பும் பயன்படுத்தக் கூடாது என்ற தீர்க்கமான உறுதியை அந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பெற்றிருந்தார். இப்போது அது மீறப்பட்டிருக்கின்றது.**

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்து இலங்கை தமிழரசு வெளியேறிவிட்டது என்று ஒரு தலைப்பட்சமாக அர்த்தம் கற்பித்து, இனித் தாங்கள்தான் கூட்டமைப்பு என்று மேலும் மூன்று கட்சிகளை சேர்த்துக்கொண்டு ரெலோவும் புளொட்டும் புறப்பட்டு இருக்கின்றமை மூலம் இரண்டு முக்கிய விடயங்கள் நடந்திருக்கின்றன.**

**அந்த இரு கட்சிகளினதும் புதிய நிலைப்பாட்டின்படி –**

**ஒன்று – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அல்லர். இந்த இரு கட்சிகளும் மற்றைய மூன்று தரப்புகளுடனும் சேர்ந்து உருவாக்கும் கூட்டுத் தலைமையே இனி கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும்.**

**அடுத்தது – நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலிமை பத்திலிருந்து நான்காகி விட்டது. ரெலோவின் மூன்று எம்.பிக்களும், புளொட்டின் ஓர் எம்.பியும்தான் இனிக் கூட்டமைப்பு.**

**சம்பந்தன், சுமந்திரன் உட்பட ஆறு எம்.பிக்களும் தமிழரசாக செயற்பட வேண்டியதுதான்.**

**தமிழ் மக்கள் ரெலோ – புளொட் கூட்டின் இந்த நிலைப்பாட்டை ஏற்று அங்கீகரிக்கப் போகிறார்களா அல்லது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்கப் போகின்றார்களா என்பதற்குக் கட்டியம் கூறும் தீர்ப்பு இந்த உள்ளூராட்சி தேர்தலை ஒட்டி வரும் என்று நம்பலாம்.**

**‘தனித்தனியாக பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொள்வோம், முடிவின் அடிப்படையில் ஒன்றித்து ஆட்சி அமைக்கலாம்’ – என்று தமிழரசு கூறிய கருத்தும் இனி சாத்தியமாகப் போவதில்லை என்றே தோன்றுகின்றது. கூட்டமைப்புக்குத் தன் பாட்டில் பிறதரப்புகளைச் சேர்த்து உரிமை கோரிய பழைய பங்காளிகளுடன், தமிழரசுக் கட்சி தேர்தலின் பின்னர் சேர்ந்து போவது கூட சந்தேகம்தான்.**

## தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தலைவர்கள் ஒன்றுபட்டுழைக்க வேண்டும்!

### ஈசான சிவ சக்திகிரீவன் பிரார்த்தனை



தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுழைக்க இறைவன் திருவருள் கிட்டவேண்டும்.

இவ்வாறு தனது பொங்கல் பிரார்த்தனையில் தெரிவித்துள்ளார் யாழ். இந்துசமயப் பேலவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன். அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உலக உயிர்கள் மகிழும் வண்ணம் சூரிய பகவான் கிழக்கே எழுந்து மேருமலையை வலமாகச் சுற்றி வருகிறான் என திருமுருகாற்றுப்படையில் காண்கிறோம். இதனை உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு என்கிறார் நக்கீரர்.

இந்த இயக்கமே உலக இயக்கத்துக்கு ஆதரமாகிறது. இதற்காக சூரியபகவானுக்கு நன்றி தெரிவித்து பொங்கலிட்டு வழிபடுவது நம்மவர் மரபாகிறது. இத்தகைய பெருமை மிகு நாளில் அனைவர்க்கும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

பொங்கலுக்கு முதல்நாள் போகிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. இன்னாளில் பழையவற்றைக் கழிப்பதும் புதியவற்றை ஏற்பதும் வழமையாகிறது.

பொங்கலுக்கு மறுநாள் பட்டிப்பொங்கல் இடம்பெறுகிறது. எமது வாழ்வுக்கு உதவும் பட்டிகளுக்கு நன்றி தெருவிப்பதே இதன் நோக்கதாகிறது.

நாம் இந்நாளில் பொங்கலிட்டு மகிழ்வதோடு ஆதரவற்றவர்ளுக்கு உதவு வோமாக.

எதுவித நியாயமுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை பெற வேண்டியும், கடந்தகாலப் போரில் உயிரிழந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும், அங்கவீனமாக்கப்பட்டோர் நல்வாழ்விற்காகவும், தமிழ் மக்களின் நீண்டகாலப்பிரச்சினைக்கு தீர்வுகாண தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுழைக்கவேண்டியும் எல்லாம் வல்ல நடராஜப் பரம்பொருளின் திருவருள் அபரிமிதமாகச் சொரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். –என்றுள்ளது.

## இல்லங்களில் பால் பொங்கிடுநல் உள்ளங்களில் இன்பம் பொங்குக!

### இந்துமதகுரு பீடதிபதி சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஆசி



பொங்கலோ பொங்கல்என அனைவரும் ஏங்கும் தைப் பொங்கல் திருநாள் வந்துவிட்டது. கிராமங்களின் வயல்களில் எல்லாம் செந்நெல் தலைசாய்ந்து களிநடனம் புரியும் காட்சியைக் கண்டு உழவர் பெருமக்களின் உள்ளங்களில் எல்லாம் கரை காணா மகிழ்ச்சி பொங்கிவழிகின்றது. அவர்கள் வயல்களிலே இறங்கி, சேற்றிலே கால் வைத்து, முந்தி செந்நெற்கதிர்களை அறுவடை செய்தால்தான் நகரத்திலுள்ள மக்கள் எல்லாம் சோற்றிலே கைவைக்க முடியும். ஆம்.தித்திக்கும் சர்க்கரைப் பொங்கலைச் சுவைத்து உண்டு மகிழ்ந்து களிக்க முடியும். ஏதேனும் சுகமான செய்தியைக் கேட்க பொங்கிப் படைக்க முடியும்.

– இவ்வாறு தனது ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார் இந்துமதகுரு பீடதிபதியும் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

ஏதேனும் சுகமான செய்தியைக் கேட்பதற்காகவே தமிழர்கள் “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பார்கள். அதாவது, எத்தனை பிரச்சினைகள் தொல்லைகள் இருந்து வந்தாலும் தை மாதம் பிறந்தால் அத்தனையும் விலகி மகிழ்ச்சி கிடைக்கும் என்பார்கள்.

இந்த நன்னாளில் மக்கள் எல்லோரும் வாசலிலே வண்ண வண்ணக் கோலமிட்டு, செங் கரும்புகளை நிறுத்திவைத்து, புதுப் பானை வைத்து பொங்கலிட்டு மகிழ்ந்து, மார்கழியைக் கைப்பிடித்து வாழ்வுதரும் தையணங்கே! சீர்வரிசையேந்திவரும் தெய்வத் திருமகளே என வாழ்த்தி, வணங்கி மகிழ்து வாழ்வார்கள்.

உழவர் பெருமக்கள் தாங்கள் மட்டும் மகிழ்ச்சியடைந்து வாழ்வதுடன் மட்டும் நில்லாமல், ஆண்டு முழுவதும் தங்களுடன் இருந்து தங்கள் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக நின்றுழைக்கும் கால்நடைகளையும் மறவாமல், அவற்றையும் குழிப்பாட்டி, களுத்தில் மலர்மாலை சூட்டி, அலங்கரித்து, அவற்றுக்கும் பூஜை செய்து மகிழ்வார்கள். அக்கம் பங்கத்திலுள்ளவர்களிடமெல்லாம் “பொங்கல் பொங்கியாச்சா?” என்று நலம் விசாரித்து அன்பை வெளிப்படுத்திக் களிப்புறுவார்கள்.

இவ்வாறாக, இல்லங்களிலெல்லாம் பால் பொங்கிட, நல்லோர் தம் உள்ளங்களிலெல்லாம் இன்பம் பொங்கவைக்கும் நற்தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வரவைப் பூரிப்புடன் வரவேற்று மகிழ்ந்து பூரிப்படைவோமாக!

சர்வே ஜனசா சுகினோ பவந்து
லோகா சமஸ்தா சுகினோ பவந்து
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க – என்றுள்ளது.

## டெங்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டால் பிள்ளைகளை வைத்தியசாலையில் சேர்க்குக!



டெங்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக பிள்ளைகளை வைத்தியசாலையில் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா பெற்றோர்களிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தாமதமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டால் ஆபத்தான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளைக் குறைந்தபட்சம் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளுக்காவது அழைத்துச் சென்று மருத்துவ ஆலோசனைகளைப் பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட சுமார் நாற்பது சிறுவர்கள் தற்போது கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
HIKVISION
MEGA STORE
No.1 WorldWide CCTV and Video surveillance
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை, சிறந்த முறையில் காண்காணிப்பினை உறுதி செய்வதற்கு குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
Main Show Room in Northern Province
+ 9475 886 0478
hikvisionmegastore@gmail.com
இல.164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
NO:164, PALALI ROAD, THIRUNELVELY, JAFFNA. Tel :021 2227126


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
J.டர்மினி நகைமாடம்
J. Darmini Jewelery
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து தரப்படும்
உங்கள் தங்க ஆபரணங்களின் தரம் பரிசோதிக்கப்பட்டு தரச்சான்றிதழ் வழங்கப்படும்.
இல.80/04, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
074 010 58 53


Sree Kumaran Jewellers
ஸ்ரீ குமரன்
நகை மாளிகை
எமது அன்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
No.74, Main Street, Nelliyady.
021 226 4465 / 077 873 3482


தைப்பொங்கல் மாபெரும் விலைக்கழிவு
YARL SMART WATER SOLUTION
FLASH SALE
One Year Warranty For All Electronic Parts.
Life Time Free Service Warranty
Free Water Testing.
Freely Available Spare Parts
24 Hours Breakdoewn Service.
021 430 0044 /076 666 5267
SMART PARTY
EVENT MANAGEMENT
FREE DELIVERY
SURPRISE
Special OFFER
SMART DANCE
SMART CAKES
SMART DJ
021 430 0045 /076 91909989
YARL SMART (Pvt) Ltd
NO.341 K.K.S ROAD JAFFNA


அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
SRI SUSILA GOLD HOUSE
நவீன யுகத்திற்கான நவ நாகரீக
நகைகளின் சங்கமம்
239, பிரதானவீதி, பருத்தித்துறை.
077 721 0206, 021 226 1003


Northway
Family Mart
Save Money Live Better
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
077 787 8708, 021 222 6002,
077 764 7645
இல.184, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
செல்லமுத்தூஸ் புடைவையகம்
SELLAMUTHUS TEXTILES
ஏவி 20-57, பிரதான வீதி,
நெல்லியடி.
AV 20-57, Main Street,
Nelliady, Karaveddy.
021 226 3238, 077 779 5726


அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
NEW SUNRISE MEDI CLINIC &
YARL BABY NEEDS
புதிய சன்றைஸ் மெடி கிளினிக் & யாழ் பேபி நீட்ஸ்
இலங்கை வங்கி அருகாமையில் தற்போது புது பொலிவுடன்
CHANNELLING
ECHO
SCAN
LAB TESTING
X-RAY
ECG
குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள்
குழந்தைகளுக்கான மெத்தை / கட்டில் வகைகள்
குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் கர்ப்பணி தாய்மார்களுக்கான அனைத்து பொருட்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்
SUNRISE MEDI CLINIC
#580, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6069
021 222 8460


Yarl Mothercare
Towards Healthy Family
யாழ் மதர் கெயர்
YARL MOTHER CARE
Medical Specialist Consultation Hospital வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்
சகல வைத்திய நிபுணர்களின் சேவைகள்
என்பின் அடர்த்தியை அளக்கும் சேவை
கண் பராமரிப்பு மையம்
"ஸ்கான்" & "எக்கோ" வசதிகள்
சகல ஆய்வுகூடப் பரிசோதனைகள்
முக அமைப்பு கதிரியல் வசதிகள்
இழையவியல் பரிசோதனை
"ஈ.சீ.ஜீ" & எக்ஸ்ரே வசதிகள்
தினமும் சேவை நேரம்
காலை 6.00
இரவு 10.00
Happy Pongal
எங்களினைத் தேடிவந்தெம்
சேவைகளால் மனம்நிறைந்து
வாழ்த்துக்களால் வளம்படுத்தி எமை
வாழ வைக்கின்ற வாடிக்கைப் பெரியோரே
தைப்பொங்கல் வாழ்த்துகள்! தளிர்த்திடுக உம்குடும்பம்!
021 221 9393 / 021 221 9595 / 021 221 9797 / 021 222 6363 / 021 222 9521
No: 514/18, Hospital Road, Jaffna. yarlmothercare.com yarlmothercare17@gmail.com


யாழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஜவுளி மாளிகை
சிவகணேசன்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
புடவையகம்
Sivakaneshan
Textiles
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
021 222 2063


அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
VAYUPUTHRAA
வாயுபுத்ரா போன் சொப்
Our Services
Phone Sale
Unlocking
Accessories
Repairs
ஸ்மாட் தொலைபேசி விற்பனையாளர்கள் & திருத்துனர்கள்
#364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 364 4246


தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361
கிளை நிறுவனங்கள்
மல்லாகம் T.P: 021 224 3393 070 301 3014 077 343 6622
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333 071 255 4135 077 434 3798
சங்கானை T.P: 021 225 1664 070 301 3016 077 434 3149
சாவகச்சேரி T.P: 021 227 0616 071 577 0616 077 435 3995
காரைநகர் T.P: 021 225 2454 070 510 2484
நெல்லியடி T.P: 021 226 099 071 755 099 077 261 244
யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004 070 301 5004 070 301 3017 077 998 6247
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001 076 384 0684 077 934 6509
வேலணை T.P:021 221 547 070 301 301
email:- sasikadrivingschool@gmail.com
web:- sasikalearners.com


அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Jaffna
GLASS HOUSE
Dealers Window Glasses
Sheet Glasses
Mirror, Plywood
Aluminium Fitting
Tempered Glasses
Partition Fitting
Hardware Items
Specialist in Tempered Glasses & Glass Edging
No.311, K.K.S.Road, Jaffna.
071 276 9189


வாடிக்கையாளர் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
இளவரசி
சேலைச்சோலை
பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்
ELAVARASI TEXTILES
125, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0094777315087,0212222503,
0094768079080
Vehicle Parking Available
Master Gacr Greadit Card Accepted

# சிறைவாசம் அனுபவித்து விடுதலையான எம் உறவுகள் தம் குடும்பத்துடன் பொங்கி மகிழ உறுதுணை செய்க!



கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசி

பல தசாப்தகாலங்கள் சிறைவாசம் அனுபவித்து விடுதலையான உறவுகள் மகிழ்வாகத் தம் குடும்பத்தினருடன் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்வதற்கு உறுதுணை செய்யவேண்டும். அவர்களுக்கு என் ஆசிகளும் வாழ்த்துக்களையும் கூறி, தொடர்ந்தும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

– இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவரது பொங்கல் வாழ்த்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்து மக்கள் நித்தமும் விடிவுதரும் பகலவனைப் போற்றி வழிபடும் நன்நாள் தைப்பொங்கல். தைத் திங்கள் திருநாளில் தரணியெல்லாம் பொங்கிப்படைத்து இயற்கைத் தெய்வங்களுக்கு நன்றி கூறி இன்புறுவர் எம் முன்னோர். அவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நாம் எங்கு வாழ்ந்தாலும் பேணிக்காக்க வேண்டியது எம் தலையாய கடமையாகும்.

தைப்பொங்கல் நாளில் வீட்டு முற்றத்தில் தவறாது பொங்கி வழிபாடு செய்யுங்கள். மூத்தோரை வணங்கி ஆசி பெறுங்கள். அயலவர்களுடன் உறவின் வலிமையைப் பெருக்குங்கள். புதிய சிந்தனைகளை உருவாக்கி நல்லன செய்ய உணவைப் பகிர்ந்து திட்டமிடுங்கள். பகையை மறந்து அன்பைப் பெருக்குங்கள் ஆலயங்களுக்குச் சென்று அனைவருக்குமாகப் பிரார்த்தியுங்கள்.

எங்கள் தலைமுறையை இன்று துன்புறுத்தும் போதை நஞ்சு ஒழிய வேண்டுதல் செய்யுங்கள். எம் மண்ணில் நாம் மகிழ்வாய் வாழ, நீதி நிலைக்க, இறையருளை மன்றாடுங்கள். சிறைவாசம் அனுபவித்து விடுதலை செய்யப்பட்ட உறவுகள் தம் உறவுகளுடன் மகிழ்வாக வாழ உறுதுணை செய்யுங்கள். ஏனையவர்களின் விடுதலை விரைவாகக் கைகூட வைத்தியசாலைகளில் வாடும் உறவுகள் நலமாகத் திரும்ப அகத்தால் வேண்டுங்கள். மனிதம் துதியுங்கள். மகத்தான பொங்கல் நாளில் அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.– என்றுள்ளது.






# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.





**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

இலங்கை மற்றும் இந்திய உணவுகளை குடும்பத்துடன் உண்டு மகிழ

# சமுத்திரா மஹால் & சைவ உணவகம்



எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவை யாழ்மண்ணில்

0094776529583
0212243536

கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம், சுன்னாகம்.

## இனி இது ....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணக்குப்படி –

தமிழரசு, விக்கி அணி, கஜேந்திர குமார் அணி மூன்றும் சைவக் கடைகள்.

முன்னாள் போராளிகள் குழுக்களான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீகாந்தா – சிவாஜி அணி, ஜனநாயக போராளிகள் எல்லாம் மிலிட்டரி ஹோட்டல்.

சைவக் கடைகள் மூன்றாகப் பிரிந்து வியாபாரம், மிலிட்டரி ஹோட்டல் எல்லாம் கூட்டாக பிசினஸ்.

நல்ல Classification தான் போங்கள்....!

நேற்று முன்தினம் பாணியில் நேற்று பிற்பகல் எனது செய்தியாளருக்கு அழைப்பு எடுத்தேன்.

“என்ன ஐந்து கட்சி கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி விட்டதா?” – என்று கேட்டேன்.

“ஓமோம்... ‘Five'S’ ஒப்பந்தம் கைச்சாத்தாகி விட்டது” – என்று பதில் வந்தது அவரிடம் இருந்து.

எனக்கு விளங்கவில்லை.

“அது என்ன ‘ஐந்து எஸ்’ ஒப்பந்தம்?” – என்று கேட்டேன்.

“ஒப்பந்தத்தில் கைச்சாத்தாத்திட்ட ஐவரினதும் பெயர்களைப் பாருங்கள்!” – என்றார்.

செல்வம், சித்தர், சுரேஷ், ஸ்ரீகாந்தா, சிவநாதன் நவேந்திரா என்று எல்லாம் எஸ் எழுத்தில் ஆரம்பிக்கும் பெயர்கள்.

இந்த ‘ஐந்து எஸ்’ என்பது ஒரு செயல்திறன் உள்ள கட்டமைப்பை அல்லது அலுவலகத்தை திறம்பட இயக்குவதற்கான ஜப்பானிய முறையாகும். சர்வதேச நிர்வாக உலகில் மிக முக்கியமாக பேசப்படும் – பின்பற்றப்படும் – கோட்பாடு இது.

இங்கு இந்த ஐந்து எஸ்களும் சேர்ந்து அப்படி ஒரு திறமையான முறைமையை அறிமுகம் செய்வார்களா? எனக்கென்னவோ சந்தேகம்தான்....!

- மின்னல் -

## ஐந்து தமிழ்க் .........

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 5 தமிழ்க் கட்சிகளும் இணைந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்திட்டுள்ளன. 5 தமிழ்க் கட்சிகளும் ‘ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி’ எனும் பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளன.

இது தொடர்பில் சம்பந்தன் எம்.பியிடம் ‘காலைக்கதிர்’ வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எவரும் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்திக் கட்சிகள், கூட்டணிகள் – கூட்டமைப்புக்கள் அமைப்பதை நான் எதிர்க்கவில்லை.

ஆனால், தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்டால் அது மக்களைத்தான் தாக்கும்; மக்களைப் பலவீனப்படுத்தும். தமிழ் மக்கள் இந்தக் கருமத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நீண்டகால வரலாற்றைக் கொண்ட கட்சி. தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சி; 1949 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வரும் கட்சி; தமிழ் மக்களுக்காக அறவழியில் போராடி பல தியாகங்களைச் செய்த கட்சி.

உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி கொழும்பில் எனது இல்லத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய தமிழரசுக் கட்சி செயற்படுகின்றது. ஆனால், கூட்டமைப்பின் ஏனைய இரு பங்காளிக் கட்சிகளும் (ரெலோ, புளொட்) அந்தத் தீர்மானங்களுக்கு எதிர்மறையாகச் செயற்படுகின்றன. இது தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை மக்கள் ஆதரிப்பார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் நான் எதிர்ப்பு அரசியல் செய்ய விரும்பவில்லை. இதுவரை காலமும் நடந்த விடயங்கள், நடக்கின்ற விடயங்கள் ஆகியவற்றைத் தமிழ் மக்கள் கவனமாகச் சிந்தித்து யாருக்கு வாக்களிக்க வேண்டும் என உறுதியான முடிவை எடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன் . – என்றார்.

## 69 இலங்கையர் ......

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை மீட்கப்பட்ட படகு உள்ளூர் நேரப்படி 04.40 மணிக்கு ரியூனியன் தீவின் துறைமுகத்துக்கு (Grand port maritime de La Runion) கொண்டு வரப்பட்டது.

7பெண்கள், ஆறு குழந்தைகள் உட்பட படகில் காணப்பட்ட இலங்கையர்கள் அனைவரும் அவர்களது சுகாதார உடல் நிலைமைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அருகே உள்ள உயர்தரப் பாடசாலை ஒன்றின் உள்ளக விளையாட்டு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## ரி.சி.ரி. நிறுவனரும் .....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

2023 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுவதற்கே இவ்வாறு கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்றைய தினம் தனது கட்டுப் பணத்தைச் செலுத்தினார்.

இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள கட்டுப் பணம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சார்பில் போட்டியிடுவதற்காகவே செலுத்தப்பட்டுள்ளது.

## பொங்கல் தினத்தில் ......

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய பகவானுக்கு வழிபாடு செய்கின்றோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பொங்கல் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பையும் போசாக்கையும் உறுதி செய்து தன்னிறைவு பெற்ற நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கான அர்த்தமுள்ள சந்தர்ப்பமாக இவ்வருட தைப்பொங்கல் பண்டிகையை நாம் கருதுவோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ள அதேவேளை சர்வதேச சந்தையின் போட்டித் தன்மைக்கேற்ப தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வினைத்திறனுடனான இலாபகரமான விவசாயத்தை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளது.

அரசாங்கத்தின் இப்புதிய பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்புத் திட்டத்திற்கு பங்களிப்பதன் மூலம் பொருளாதாரச் செழிப்புடைய நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து இலங்கையர்களும் இந்த தைப்பொங்கல் தினத்தில் ஒன்றிணைய வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சூரிய பகவானை வணங்கி, உலக மக்களுக்கு உணவளித்து உயிர்காக்கும் உழவர்களைப் போற்றுவதுடன் விவசாயம் செழிப்படைந்து, வறுமை நீங்கி, செழிப்பான நாட்டை உருவாக்கும் பயணத்திற்கு இத் தைப்பொங்கல் பண்டிகை ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து தமிழர்களும் இத்தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வாழ்த்துகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போராளிகளின் ........

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளராக நியமிக்க வேண்டுமென்றே விக்கினேஸ்வரன் வலியுறுத்தினார் எனவும் –

அவர் வெளியேறியமைக்கு ஜனநாயக போராளிகள் கட்சி காரணம் இல்லை எனவும் – எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்றுக் காலை வரை விக்னேஸ்வரனுடன் தாம் கலந்துரையாடியிருந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதப் போராட்டத்தில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிர் பலியாகினர். அதையும் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான போராளிகளின் தியாகங்களையும் கொச்சைப்படுத்துவதற்கு எவருக்கும் அருகதை கிடையாது என எம்.கே.சிவாஜிலிங்கம் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அனைவருடனும் சேர்ந்து இயங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாரக இருப்பதாகவும் தமது ஒத்துழைப்பு பூரணமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவர்கள் இதில் இணையவில்லை என்றால் அதற்கு தாங்கள் பொறுப்பு இல்லை என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்திருந்தார்.

## மயிலிட்டியில் ....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எழுப்பி நிற்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தேசிய பொங்கல் விழாவைக் கொண்டாடுவதற்காக இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுக் காலை தொடக்கம் தொடர் போராட்டம் ஒன்றை மயிலிட்டி மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் தமது ஆதங்கங்களை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த 32 வருடங்களாக நாம். முகாம்களில் வாழ்கின்றோம் முகாம்களில் பாரிய துன்பங்களை அனுபவித்து வருகிறோம். இனிமேல் இந்தத் துன்பங்களை அனுபவிக்க முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே அரசாங்கம் தமது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டுமென மயிலிட்டி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

## உயர்தரப் பரீட்சையை .....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் அறிவித்துள்ளனர் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமது திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மின்சார சபை உள்ளிட்ட அதிகாரிகள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பித்து பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

அதற்காக 331,709 பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் தோற்றவுள்ளனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 2,200 நிலையங்களில் பரீட்சையை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## 10 மாதங்களில் ......

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய குற்றமாகும் எனவும் தேவையேற்படின் பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள தனியார் மருந்தகங்களில் போதையை ஏற்படுத்தும் மருந்து விற்பனை தொடர்பில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் நிலக்சன், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி யூட் பிரீஸ், வவுனியா மேலதிக சுகாதார வைத்திய அதிகாரிகளான பிரசன்னா மற்றும் அரங்கன், உணவு மருந்து பரிசோதகர் ச.பார்த்தீபன் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ஓர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அங்கு குறித்த (போதையினை ஏற்படுத்தக்கூடிய) மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன் தவறான முறையில் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த வைத்திய நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அருகாமையில் ஓர் தனியார் மருந்தகத்தில் ஜனவரி 2022 லிருந்து ஒக்டோபர் 2022 வரையான காலப்பகுதியில் 1,220 பெட்டி போதையினை ஏற்படுத்தக்கூடிய மருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஓர் பெட்டியில் 35 மருந்துகள் வீதம் மொத்தம் 42 ஆயிரத்து 700 மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மருந்து கொள்வனவுக்குரிய பற்றுச்சீட்டுக்கான காசோலையை குறித்த தனியார் மருந்தகத்தின் இயக்குனரான அரச வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர் அவரது கையொப்பத்துடன் வழங்கியுள்ளமையும் விசாரணையில் அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த 42,700 மருந்துகள் எங்கு சட்டரீதியற்ற முறையில் விநியோகப்பட்டுள்ளன என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்விடயம் தொடர்பாக திணைக்களத்தினால் பூர்வாங்க விசாரணைகள் செய்யப்படல் வேண்டும். மேலும் இது ஓர் பாரிய குற்றம் என்பதுடன் தேவையேற்படின் பொலிஸ் விசாரணை செய்யப்பட வேண்டும் என அறிக்கையின் இறுதியில் தெரிவிக்கப்பட்டு விசாரணைக் குழுவினால் கையொப்பம் இடப்பட்டு அறிக்கைகள் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர்ச்சியாக வவுனியாவில் போதை மருந்துகள் விற்பனை இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்...
அதியுயர் ஜப்பான் தொழிநுட்பத்துடன்
நுண்ணுயிர்களை கொல்லக்கூடிய ஒரே பெயின்ட்
நிப்போனிடமிருந்து மட்டுமே..!
NIPPON
HEALTH CARE SOLUTIONS
MEDIFRESH 3in1
SILVER ZINC ION
NIPPON PAINT
NIPPON PAINT
SELLEYS
IF IT'S SELLEYS IT WORKS™
துருபிடித்தல் மூலமான பிரச்சனைகளுக்கு
சிறந்த தீர்வு
RP7
MULTIPURPOSE LUBRICANT
✔ இயந்திரங்கள் நெரிசல்களால் ஏற்படுத்தும் சத்தங்களைத் தடுக்கின்றது
✔ ஈரப்பதத்தை நீக்குகின்றது
✔ துருபிடித்துள்ள பகுதிகளில் ஊடுருவி, சிக்கிய உலோக பாகங்களை தளர்த்தும்
✔ துருபிடித்தல் மற்றும் உலோக அரிப்புக்கு எதிராக பாதுகாக்கிறது
✔ பல்வேறு பரப்புகளில் ஒட்டி இருக்கும் கிரீஸ், தூசி மற்றும் அழுக்கு போன்ற அசுத்தங்களை எளிதாக நீக்குகிறது
✔ சிக்கிய மோட்டார் பாகங்களை மீண்டும் செயல்படுத்துகிறது
✔ ரப்பர், வர்ணப்பூச்சு அல்லது பெரும்பாலான பிளாஸ்டிக் பரப்புகளின் மீது எதிர்மறையாக செயல்படாது
SELLEYS RP7
150g
300g
www.selleys.com
www.nipponpaint.lk
NIPPON PAINT LANKA (PVT) LTD.
No. 69A, Buthgamuwa Road, Rajagiriya, Sri Lanka.
Telephone: +94 11 4 600400. Fax: +94 11 4 600409
www.nipponpaint.lk

# தைப் பொங்கல் திருநாள் புதுப்பாதை திறந்திடட்டும்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற்றிருக்க வேண்டும் என்று – பொங்கல் திருநாளில் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போம். வறுமை அகல வேண்டும். வாய்மை நிலைக்க வேண்டும். பொறுமை பொலிய வேண்டும். பொய்மை அகல வேண்டும்.அறிவு பெருக வேண்டும். ஆன்மீகம் சிறக்க வேண்டும். அன்பு நிலைக்க வேண்டும். அறியாமை மறைய வேண்டும்.

பொங்கல் என்றாலே புத்துணர்வு வருகிறதல்லவா! பொங்கல் என்றாலே பூரிப்பு பெருகிறது அல்லவா! பொங்கல் என்றாலே ஆனந்தம் பெருக்கெடுக்கிறது அல்லவா! அதனால்தான் ‘பொங்கலோ பொங்கல்’ என்று பொங்கலை மகிழ்வாய் வரவேற்றுப் பொங்கியும் மகிழுகின்றோம்.

உறவுகள் கூட வேண்டும். ஒற்றுமை ஓங்க வேண்டும். பிரிவுகள் மறைய வேண்டும். பெரியவர் வாழ்த்த வேண்டும். இளையவர் சிறக்க வேண்டும். இன்பமே இருக்க வேண்டும். இதுதானே பொங்கலின் உட்பொருளாய் அமைந்திருக்கிறதல்லவா!

பொங்கலின் சிறப்புகள் எங்கள் தமிழினத்தின் ஏற்றமிகு பண்பாட்டுப் பெட்டகமே ஆகும். புத்தரிசி, புதுப் பானை, கோலம், மாவிலை, வாழையிலை, மஞ்சள், கரும்பு, அது தரும் சுவையான சர்க்கரையும் வெல்லமும். வெற்றிலை, பழங்கள், நிறைகுடம், குத்துவிளக்கு, இலக்குமியாய் எங்களின் பசுக்கள், அது அன்பாய் பொழியும் அமுதாம் பசும்பால், அத்தனையும் பொங்கலுக்கு வாய்த்திட்ட பொக்கிங்கள் அல்லவா!

இனிப்பாய் இருக்க வேண்டும். சிறப்பாய் இருக்க வேண்டும். பொறுப்பாய் உழைக்க வேண்டும். நன்றியாய் இருக்க வேண்டும். நலிந்தோர்க்கும் நல்க வேண்டும். பொங்கிய பொங்கலை நாமும் உண்ண வேண்டும். மற்றவர்க்கும் பகிர்ந்தளித்து மகிழவும் வேண்டும்.

உதவும் மாடுகளுக்கு நன்றி. உழைக்கும் உழைப்புக்கும் நன்றி. ஒளி கொடுக்கும் ஆதவனுக்கும் நன்றி. மண்ணுக்கும் நன்றி. விண்ணுக்கும் நன்றி. மண்போட்ட விதை முழைக்க வைத்திட்ட மாமழைக்குக்கும் நன்றி. இத்தனைக்கும் உரித்தாய் அமைந்திருக்கும் உன்னதத் திருநாள் தான் எங்களின் ‘பொங்கல் திருநாள்’. அந்தத் திருநாளைப் பற்றி அறிவதும் அகத்திருத்துவதும் அவசியம் அல்லவா!

‘தைபிறந்தால் வழிபிறக்கும்’ என்று தமிழர்கள் சொல்லுவது வழக்கமாகும். அந்த வழக்கம் தொடர் ந்து வரவேண்டும் என்பதே யாவரதும் ஆசையாகும்.

**‘தை பொறந்தால் (பிறந்தால்) வழி பிறக்கும் தங்கமே**
**– தங்கம்**
**தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்**
**முத்துச் சம்பா நெல்லு குத்தி தங்கமே தங்கம்**
**முத்தத்திலே சோறு பொங்கி தங்கமே தங்கம்**
**குத்து விளக்கேத்தி வச்சு ( வைத்து ) தங்கமே தங்கம்**
**கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தங்கமே தங்கம்’**

– என்னும் இந்தப் பாடல் மனமகிழ்ந்த பொங்கலை, மலர்ந்த பொங்கலை, மண் வாசனை தரும் பொங்கலை, உயிர்த் துடிப்பான பொங்கலை, கலாசாரம் பண்பாடு கலந்த பொங்கலை நினைவூட்டி நிற்கி றதல்லவா? அப்படி ஒரு காலம் இருந்தது. அந்தக் காலம் எங்கள் ஆழ் மனதில் அமர்ந்திருக்கிறதல்லவா? அப்படி ஒரு காலம் வரவேண்டும் என்பதுதான் எல்லோரதும் ஆசை!

**‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில்**
**‘உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்’**
**‘உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லைக் கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு’**
**‘சேற்றில் கால் வைக்காவிட்டால் சோற்றில் கைவைக்க முடியாது’**

இவையெல்லாம் பொங்கலை மனமிருத்தும் அமுத வாக்குகள்.

தைமாதத்தின் தொடக்கத்தில் இந்த விழா ஏன் கொண்டாடப்படுகிறது? இந்த விழாவை யாரை மையப்படுத்திக் கொண்டாடுகிறோம்? இந்த விழாவின் அடிப்படை எதனை உணர்த்துகிறது ? இந்த விழாவில் தமிழரின் எத்தகைய பண்பாட்டு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன? பொங்கல் என்றால் புது உடைகள் வாங்குவோம். பொங்குவோம். தொலைக்காட்சியில் நடக்கும் பொங்கல் கொண்டாட்ட நிகழ் ச்சிகளைப் பார்த்து ரசிப்போம். அத்துடன் பொங்கல் விழா நின்றுவிடும். இதுவா பொங்கல் திருநாள்!

உழைப்பு என்பதுதான் சமுதாயத்தின் அடிப்படை. அந்த உழைப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே. உழைப்புக்கு உதவும் மனிதர்கள், உழைப்புக்கு உதவிடும் விலங்குகள், உழைப்புக்கு உதவிடும் கருவிகள் கவனத்தில் கொள்ளப்படுவதுதான் சமுதாய அறமாகும். அப்படி யான ஓர் அறத்தை வலியுறுத்தத்தான் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறோம் என்பதை மனமிருத்தல் வேண்டும்.

விவசாயம் என்பதுதான் சமூக வாழ்வுக்கு முதுகெலும்பாகும். விவசாயம் கொண்டு வருகின்ற பொருள்களால்தான் சமூகத்தில் மக்களின் அன்றாட வாழ்வே சிறப்பாகிறது. அந்த விவசாயத்தைச் செய்பவன் இந்தப்



பொங்கலில் போற்றப்படுகின்றான். அந்த விவசாயிக்கு உதவும் மாடுகள் பூசிக்கப்படுகின்றன. விவசாயத்தை செழிப்பாக்கும் சூரியன் வணங்கப்படுகிறான். விவசாயத்துக்கு உதவும் கருவிகள் மதிக்கப்படுகின்றன. இதனால் தைப்பொங்கல் என்பது நன்றியை நவில்கின்ற பெருவிழா அமைகிறது என்பது முக்கிய கருப்பொருள் எனலாம்.

தையில் அறுவடை செய்த புத்தரிசி கொண்டு புதுப் பானையில் பாலும் சர்க்கரையும் சேர்த்து மண் பானையில் பொங்கி மகிழும்பொழுது பொங்கி வரும் பாலினைப் பார்த்து குடும்பத்தில் உள்ளார்கள் ‘பொங்கலோ பொங்கல்’ என்று மகிழ்ந்து நிற்கும் நிலையை எங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் இருக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும்.

கூட்டுறவின் மகத்துவம் தைப்பொங்கலின் சிறப்பாகும். மனிதனும் விலங்குகளும் கூடி உழைத்து அதன் பயனாக வெளிப்படும் ஒரு கூட்டுறவுத் திருநாள் என்றுகூட தைப்பொங்கலை எடுத்துக் கொள்ளலாம். வருடத்தின் தொடக்கமாய் வரும் தையினை மங்களகரமாக வரவேற்க வேண்டுமென்று எண்ணி பொங்கல் திருநாளினை ஏற்படுத்திய எங்களின் முன்னோர்களை நாங்கள் வாழ்த்தாமல் இருந்திட முடியுமா? வருடத் தொடக்கத்தில் மனதில் ஏற்படும் எண்ணங்கள்தான் அந்த வருடம் முழுவதையும் மகிழ்வுடன் வாழ வைக்கும் என்று எண்ணிய உளவியல் சிந்தனையை உவந்தேற்ற வேண்டாமா?

பொங்கலின் முதலில் மார்கழியின் நிறைவில் போகி என்றொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. போகி என்றால் பழைய வியங்களை பழைய பொருள்களைக் களைந்து விடுவதாகும். அடுத்து பொங்கல் வருகிறது. பழைய பொருள்களை எரித்து விடுவதைத்தான் போகியில் காண்கிறோம், உண்மையில் இதன் அர்த்தம் அதுவன்று. எங்கள் மனத்திலுள்ள பொறாமை வஞ்சகம். பொய், கபடு, சூது , வாது, இவற்றையெல்லாம் ஞானம் என்னு. தீயில் பொசுக்கி மனதைத் தூய்மை ஆக்கி புத்தாடை உடுத்து புதுப்பொங்கலை சுவையாக உண்டு புத்துணர்வு பெற்று நிற்கவேண்டும் என்பதுதான் இதன் தாற்பரியம் எனலாம்.

பொங்கலுக்கு அடுத்து மாட்டுப் பொங்கல் வருகிறது. விவசாயத்துக்கு உதவிய மாடுகளுக்கும், பால் தந்து எம்மை வாழ்வித்த பசுக்களுக்கும் நன்றி நவிலும் நாளாக இது அமைகிறது. அடுத்த நாள் ‘காணும் பொங்கல்’ அமைகிறது. உற்றார் உறவினரை, பெரியவர்களைக் கண்டு அவர்களின் வாழ்த் தினை ஆசியினைப் பெற்றுக் கொள்ளும் நாளாக இந்த நாளை அமைத்து மகிழ்கின்றார்கள்.

மாட்டுப்பொங்கல், போகித்திருநாள், காணும் பொங்கல் இவைபற்றி எல்லாம் நகரத்தில் வாழ்கின்றவர்களுக்கோ. புலம்பெயர் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கோ தெரியவருவது குறைவாகும். பொங்கலைக் கூட குக்கரில் பொங்கி தாங்கள் இருக்கும் வீட்டின் அடுப்படியில் வைத்து கரண்டியால் இரண்டு கர ண்டி அவசர அவசரமாக வாயில் போட்டுவிட்டு வேலைக்கு ஓடும் நிலையினைத்தான் பொங்கல் நன்னாளில் காண்கின்றோம். மாடிக்குடி இருப்புகளில் வாழ்கின்றவர்களின் பொங்கலை நினைத்துப் பார்க்கவே பரிதாபமாகவே இருக்கும்.

சமயம் கடந்த விழாவாக தமிழர் விழாவாக தைப்பொங்கல் விளங்குகிறது என்பதுதான் இந்த விழாவின் மிகச் சிறப்பு எனலாம். உலகில் வாழுகின்ற தமிழர்கள் – தைப்பொங்கலை மகிழ்வுடன் ‘பொங் கலோ பொங்கல்’ என்று பொங்கும் மனத்துடன் கொண்டாடி மகிழ்கிறார்கள். சமயச்சாயம் பூசப்படாத தமிழர் திருநாளாய் தைப்பொங்கல் திகழ்கிறது என்பது தமிழருக்கெல்லாம் மிகவும் பெருமையான விடயம் அல்லவா! நன்றி நவிலும் விழா! உழைப்பாளரின் உன்னத விழா! கூட்டுறவின் விழா! மத பேதமற்ற மகோன்னத விழா! எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் நிறை என்னும் விழா! எனவே பொங்கலோ பொங்கல் என்று ஆனந்தமாய் கொண்டாடி அகமகிழ்வோம் வாருங்கள்! உதவுவதை உளமிருத்த பொங்கல் திருநாளில் அனைவரும் சங்கற்பம் எடுத்திடுவோம். கற்பவர்க்கு இயலுமான வரை கைகொடுக்க எண்ணிடுவோம். ஏழையாய் இருப்பார்க்கு இயன்றவரை இருப்பதைக் கொடுத்திடவும் எண்ணிடுவோம். கற்கின்ற மாணவர்கள் ஏழ்மையால் உழலுவதைக் கைகட்டி நின்று பார்க்கும் மனநிலையைக் கைவிட்டு அவர்களைக் கையணைப்போம். உள்ளங்கள் அன்பாய் அருகணைய வேண்டிடுவோம். பொங்கல் திருநாள் புத்தொளியை தந்திடட்டும்!

**பொங்கல் திருநாள் புதுப்பாதை திறந்திடட்டும்!**
**தை பிறக்கும் நாளை விடியும் நல்ல வேளை**
**பொங்கப் பான வெள்ளம் போலப் பாயலாம்**
**அச்சு வெல்லம் பச்சரிசி வெட்டி வெச்ச செங்கரும்பு**

**அத்தனையும் தித்திக்கிற நாள்தான்**
**எங்கள் தை பிறக்கும் நாள்தான்**
**ஆடுவோம் பாடுவோம் கொண்டாடுவோம்**
**அன்பாகச் சேர்ந்துமே பொங்கி மகிழ்வோம்**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2023இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் இப்பொருளாதார நெருக்கடியை இயற்கையோடு இணைந்து வெற்றி கொள்வோம்!

## தைப்பொங்கல் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தமது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.

உழவர்கள் தங்கள் உழவுக்கு உதவிய சூரியனுக்கும் ஏனைய உயிர்களுக்கும் நன்றியறிதலாக தை முதலாம் திகதியை தைப்பொங்கல் விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

தைப்பொங்கல் விழாவானது, மனிதனுக்கும் மற்றும் இயற்கைக்கும் உள்ள உன்னத உறவை புலப்படுத்துவதாக அமைகிறது.

அனைத்து இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தின் வெளிப்பாடாகவும், பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய நட்பின் அடையாளமாகவும் தைப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

2000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த தைப்பொங்கல் பண்டிகை, தமிழர்களின் பாரம்பரிய, கலாச்சார அடையாளத்தை பேணுவதுடன், மனிதனுக்கும் இயற்கையுக்கும் இடையிலான பிரிக்க முடியாத தொடர்பை அடையாளப்படுத்துவதாகவும் அமைகிறது.

மக்களிடையே ஒற்றுமை மற்றும் சமூகத்தின் நட்புணர்வைப் புதுப்பிப்பதுடன், எதிர்கால வெற்றிக்கான ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் பெறுவதற்கு ஏதுவாக தைத்திருநாள் அமைகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருங்கடியான இக்காலகட்டத்தில் விவசாயத்துறையின் பங்களிப்பு அளப்பரியது. ஆகவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இயற்கையோடு இணைந்து வெற்றி கொள்வதற்கான நாளாக தைத்திருநாள் அமையப் பிரார்த்திப்போம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு அமைவாக இலங்கையர்களாக இனம் – மதம் கடந்து சகோதரத்துவத்துடன் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி, நாட்டை ஒன்றாய் முன்னோக்கி கொண்டு செல்ல உறுதி பூணுவோம்.



இனம், மதம், சாதி போன்ற குறுகிய வேறுபாடுகளை மறந்து இயற்கையோடு இணைந்து வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அனைத்து இந்து பக்தர்களுக்கும், உலக மக்கள் அனைவருக்கும் தைப் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். – என்று உள்ளது.

## ஜனாதிபதியாக இன்று யாழ் வருகிறார் ரணில்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.15

இன்று யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொங்கல் நிகழ்வுடன் இரு இடங்களில் இடம்பெறும் கூட்டங்களிலும் பங்குகொள்கின்றார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய தினம் காலையில் முப்படைகளின் தளபதிகள் சகிதம் வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலையில் நல்லை ஆதீனம், மறைமாவட்ட ஆயர் மற்றும் நாகவிகாராதிபதி ஆகியோரிடம் ஆசிகளைப் பெறுகின்றார்.

மாலையில் 3 மணியளவில் நல்லூர் சிவன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்டு பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.

பொங்கல் ஆரம்பத்தை தொடர்ந்து 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையில் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கு கொண்டு உரையாற்றுகின்றார்.

இதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலகத்தில் மாவட்டத்தின் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக துறைசார் திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் சகிதம் ஒரு மணிநேரக் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதில் ஜனாதிபதி பங்குபற்றுவார்.

## ரூ.11 கோடி பெறுமதி தங்கத்துடன் யுவதி கட்டுநாயக்காவில் சிக்கினார்



11 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கத்தை மறைத்து இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் வருமானக் கண்காணிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தப் பெண் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

துபாயில் இருந்து இந்தியாவின் சென்னை வழியாக குறித்த பெண் நாட்டுக்கு வந்துள்ளார்.

இந்தப் பெண்ணின் உடமைகளைச் சோதனையிட்டதில், மறைத்து வைக்கப்பட்டிருந்த 24 கரட் நெக்லஸ்கள், மோதிரங்கள் மற்றும் வளையல்கள் அடங்கிய நகைகள், 24 கரட் தங்கத் தகடுகள் 27 மற்றும் திரவத் தங்கம் அடங்கிய 8 கேப்சூல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நகைகள் வெள்ளியால் நேர்த்தியாக முலாம் பூசப்பட்டிருந்தமையுடன் தங்கத் தகடுகள் வங்கி அட்டைகளாக வடிவமைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நகைகள் மற்றும் தங்கத் தகடுகளின் மொத்த எடை 4,892 கிராம் மற்றும் சந்தை மதிப்பு 11 கோடி ரூபாவை விட அதிகம் என தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## சு.க.தலைவர் பதவியிலிருந்து மைத்திரியை கௌரவமாக விலகக் கோருகிறார் வெல்கம

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று முறை அரசமைப்பை மீறியுள்ளார் என்பதை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

சுதந்திர கட்சியின் தலைவராக இவர் பதவி வகிக்கும் வரை சுதந்திரக் கட்சிக்கு விடிவு காலம் தோற்றம் பெறாது. ஆகவே மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் இருந்து கௌரவமாக விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பலவீனமான நிர்வாகத்தினால் ஏற்பட்ட விளையை உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கௌரவமான முறையில் வரவேற்கிறோம்.

மைத்திரிபால சிறிசேன மூன்று முறை அரசமைப்பை மீறியுள்ளார். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை தொடர்ந்து நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது.

அத்துடன் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி குறுக்கு வழியில் பிரதமரை நியமித்து, அரசமைப்பிற்கு எதிராக செயற்பட்டார்.

52 இரண்டு நாள் அரசியல் நெருக்கடி நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்தி குண்டுத்தாக்குதல் வரை கொண்டு சென்றது.

52 இரண்டு நாள் அரசியல் மாற்றம், நாடாளுமன்றம் கலைப்பு ஆகியன அரசமைப்பிற்கு முரண் என நல்லாட்சியின் அரச தலைவராக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது.




தற்போது பொறுப்பில் இருந்து விலகிய பின்னர், ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இடம்பெற்றமைக்கு மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏகமனதாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன அரசமைப்பினை மீறியுள்ளார் என்பது மூன்று முறை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. ஆகவே சுதந்திரக் கட்சியின் தலைவராக பதவி வகிப்பதற்கு இவருக்கு தார்மீக உரிமை கிடையாது. சுதந்திர கட்சியின் கொள்கைகளுக்கு எதிராகவே இவர் செயல்படுகிறார். சுதந்திர கட்சிக்கு விடிவு காலம் பிறக்க வேண்டுமாயின் மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகி கட்சியின் சிரேஷ்ட தரப்பினருக்கு இடமளிக்க வேண்டும்.

ஹெலிக்கொப்டர் சின்னத்தில் அண்மையில் 'சுதந்திர மக்கள் முன்னணி' என்ற புதிய அரசியல் கூட்டணி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த கூட்டணியில் இணையுமாறு எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன இந்த கூட்டணியில் பிரதான பங்காளிக் கட்சி தலைவராக இருப்பதால் நான் கூட்டணியில் இணையவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பை தொடர்ந்து இந்த கூட்டணிக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கு மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏகமனதாக தீர்ப்பு வழங்கியுள்ள பின்னணியில் சுதந்திர மக்கள் முன்னணி கூட்டணி எவ்வாறு மக்கள் மத்தியில் செல்லும் என்பது பிறிதொரு பிரச்சினையாகும். என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 239

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பழிவாங்கும் வஞ்சகங்கள்

ஜே.ஆர். யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக முற்றவெளியில் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக வந்திருந்த போது, பேச்சு இடையே அந்த மேடையைத் தகர்ப்பது என்ற திட்டத்தை ஈரோஸ் அமைப்பு சில போராளிகளுடன் சேர்ந்து முன்னெடுத்தது. 1976 ஆம் ஆண்டு காலங்களில் விடுதலைக் குழுக்கள் இடையே தற்கொலைக் குண்டுதாரிகள் உருவாகவில்லை. நவீன ஆயுதங்களும் இருக்கவில்லை. வைக்கப்பட்ட குண்டுகளால் மேடை சரிந்து சேதம் அடைந்தது. அவ்வளவே. அதுவல்ல, முக்கியம். ஜே.ஆர். தப்பி, பின் தனது ஆதரவாளர்களுடன் பேசியபோது தனது மனோபாவங்களை வெளிப்படுத்தினார். ''நான் இதனைமறக்கமாட்டேன். அவர்களுக்குஒ பாடம் படிப்பிப்பேன்" (I will not forgot this. I will teach them a lesson) என்றார். குண்டு வைத்தவர்களை அவர் அறிந்திருக்கவில்லை. ஆனால் பாடம் படிப்பிப்பேன் என்று, ஒட்டுமொத்த தமிழ் மக்களைக் குறித்துத்தான் அவர் குறிப்பிட்டார்.

1977, 1983 கலவரங்களின் போது அவர் பேசியவற்றை நினைவு கூர்ந்தால் இவற்றைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு சிறிய முள் குத்துவது சீழ் கட்டி அவனது உயிரைக் கொண்டு செல்லும் யமன் ஆகலாம்.

ரூவண்டா படுகொலை திட்டமிடப்பட்டது. ஆனாலும் அதன் தொடக்கம் நாட்டின் ஜனாதிபதி விமான பயணத்தின் போது குண்டு வைத்து கொல்லப்பட்டமை என நம்பிய ஓர் இனத்தவர் அது மற்ற இனத்தவரால் நடத்தப்பட்டது என்ற சந்தேகம் கொண்டனர். அதுபோலவே, இனக் கலவரம் ஒன்று ஜே.ஆரின் நம்பிக்கை கொண்டவர்களால் தயாரிப்பில் இருந்தாலும், 1983 ஜூலையில் 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டமையும் அதற்குக் காரணமாகியது.

சிங்கள – பௌத்த பேராண்மையின் ஆளுமைக்காக, தமிழ் மக்களிடையே எவ்வளவு அழிவுகள் வந்தாலும், விடுதலைப் புலிகளை முடிப்பது என்ற கங்கணத்தில் செயல்பட்டவர்கள்தான் ராஜபக்ஷ சகோதரர்கள். சரணடைந்தவர்கள் யாவரையும் சுட்டுக் கொன்று விட்டோம் என்று ஐ.நா. அதிகாரிகளுக்கு எகத்தாளமாக பதிலளித்தவர் கோட்டாபய.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க தான் கொலை செய்யப்படுவேன் என உணர்ந்து, தனது நண்பனான ஜனாதிபதி மஹிந்தவுக்கு முற்கூட்டியே எழுதி வைத்த கடிதம் பிரசித்தமானது.

அவரின் மகனின் ஒருதலைப் பட்சகாதலுக்காக ரக்பி விளையாட்டு வீரர் தாஜுதீன் இனம் தெரியாதவர்களால் – ஆனால் அடையாளப்படுத்தப்பட்டவர்களால் – கடத்தப்பட்டமையும் கொல்லப்பட்டமையும் நாடறிந்த சம்பவங்கள்.

ஆக இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதற்கு சாத்திய கூறுகள் தெரியும் போது சம்பந்தனின் விரல் நீட்டிய குறைகூறல்கள், சுமந்திரனது விளாசல்கள், ரணிலைப் பற்றிய விமர்சனங்கள், சாணக்கியனின் நெருடல்கள் யாவும் 'கலகிகளின்'கைதட்டல்களுக்குஏதுவாகலாம். ஆனால் புரையோடிப் போன சிக்கலான இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கும் போது, அணுகுமுறைகள் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும். மக்கள் தெரிவில் பார்க்கலாம் என பின் போடலாம்.

காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் 'கோட்டா கோ ஹோம்', பின் 'மைனா கோ ஹோம்' அமைத்து நாட்டையும் சர்வதேசத்தையும் வியப்பில் ஆழ்த்திய பொழுது, மீட்சிக்கு வழி இல்லை என்று கண்ட மஹிந்த தனது குண்டர்களை ஏவி, வன்முறையைத் தூண்டி விட்டு, பின்னர் திருகோணமலையில் பதுங்கி, இப்போது ரணிலின் பின்னாலிருந்து நூல் இழுக்கும் வித்தைக்காரனாக ஆளுமையில் உள்ளார். கனடாவின் தடைகளில் விடுதலைப் புலிகளின் சர்வதேச புலம்பெயலாளர்கள்தான் பின்னணியில் நிற்கின்றார்கள், அவர்கள் பிரிவினையைத்தொடர்ந்து நாட்டில் ஊக்குவிப்பார்கள், தீர்வுகளைப் பின்தள்ளி போடலாம், அன்றில் உள்ளூராட்சித் தேர்தல்களில் இவை அவலாகி, அவை வன்முறைகளும் ஊழல்களும் தலைவிரித்தாடி, பின் வாக்கு விகிதாசாரங்களில் மக்கள் ஒற்றை ஆட்சியை ஆதரித்தனர், எந்தவித அதிகாரப் பகிர்வையும் ஆமோதிக்கவில்லை என பிரச்சாரப்படுத்தலாம் என எண்ணக் கூடும்.

சீன உயர்மட்ட அதிகாரிகள் பேச்சுகளுக்காக நாட்டிற்கு வருகிறார்கள். அப்படியான முக்காடுகளுக்குப் பின்னான கைப்பிடிப்பு சாமர்த்தியங்களால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது ராஜதந்திரத்தை சாமர்த்தியமாக நடத்தி வருகிறது ஸ்ரீலங்கா.

### சைவ - மிலிட்டரி ஹோட்டல்கள்

தமிழ்க் கட்சிகள் செயற்படுவது கோவில் திருவிழாக்களில் பற்பொடி, லேகியம், தைலம் விற்பவர்கள் போல் என்று குறித்து இருந்தேன. இன்றைய மின்னல் பகுதியில் காலைக்கதிர் ஊடகவியலாளர் மூன்றுசைவஹோட்டல்கள் (தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி) எஞ்சியவை யாவும் (புளொட், ரெலோ, ஸ்ரீகாந்தாவின் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றவை) ஒரு காலகட்டத்தில் ஆயுதம் தாங்கி போராடியமையால் 'மிலிட்டரி ஹோட்டல்' மதிப்பீடு செய்ததைக் குறிப்பிடப்பட்டிருந்தது. முடிவில் இந்த கட்சிகளின் இருப்பும் அவற்றின் ஆதரவும் மக்களிலேயே தங்கி உள்ளன. அவர்கள் தேர்தலில் போட்டியிட்டுப் பதவிகள் பிடித்து விடலாம் என துடிக்கின்றார்களா அல்லது தேவையான, யதார்த்தமான வியூகத்தில் தமிழ் மக்களுக்கு விடிவு தர செயல்திட்டங்கள் அமைக்கப் போகின்றார்களா என்பதை இன்றைய ஈழநாட்டின் ஊர் குருவியின் பதிவு தெளிவாக்குகிறது.

இந்திய வெளிய விவகார அமைச்சர் இன்னும் சில நாள்களில் உத்தியோக பூர்வமான வியத்தை மேற்கொண்டு நாட்டிற்கு வருகிறார். யாழ்ப்பாணத்துக்கும் அவர் வருவார் எனச் செய்திகள் உண்டு. கட்சிகளுடன் ஏதாவது பேச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதில் தெளிவில்லை. ஆனால் வருகையின் போது பேசும் பொருள்கள் இருக்கும்.

### திசைகளின் புரிந்துணர்வு

உருவாகுகின்ற சைவ, மிலிட்டரி ஹோட்டல்கள் யாவும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் வாழ்வுக்கு, தங்களது தொடர்ந்து எதிர்காலத்திற்கு, அவர்கள் இந்திய அனுசரணையுடனும் ஆதரவுடன் இயங்கப் போகிறார்களா, அன்றில் அதனை விட்டு விலத்தி, ஸ்ரீலங்கா தரும் தீர்வுகளில் (அவர்கள் தீர்வு என்பதை தர வேண்டியதில்லை பொருளாதார வளர்ச்சிகளில் இணைவது) இந்திய கடல் பிராந்தியத்தின் அவர்கள் எடுக்கும் நிலைப்பாடுகளுக்காக ஒரு நாடு, ஒரு தேசமென ஒத்துப் போவதா என்ற தீர்க்கமான முடிவு கொள்ள வேண்டும். கஜேந்திரகுமார் அணி இந்தியாவின் அதிகாரத்திற்கு கட்டுப்பட போவதில்லை, தாங்கள் கேட்கும் தீர்வுக்கு – அதாவது தமிழ் மக்கள், தேசிய மாவீரர்கள் தியாகங்களுக்கு புறம்பாக இல்லாத தீர்வுக்கு – என்பவற்றுக்குள் இணங்கி வந்தால், அதனைப் பரிசீலிக்க முடியும், அதுவரை சர்வதேச சமூகத்தால் ஈடுசெய் நீதியில் அமையும் தீர்வுகளுக்கு முன்னெடுப்பை செய்யலாமென்ற நிலைப்பாட்டில் தொடரலாம்.

விடுதலைப் போரின் முடிவில் இந்த 13 வருடங்களும், சம்பந்தன் கூட கூட்டமைப்பை, இந்தியாவை விலக்கி, ஸ்ரீலங்காவின் ராஜபக்ஷக்கள், பின் ரணிலோடு பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்துக்கு மேலான தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும் என வழி நடத்தியவர்.

நல்லாட்சி காலத்தில், 2015 இல், சுமந்திரன் கூட இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாங்கள் இந்தியாவைதங்கியிருக்க வேண்டியதில்லை என நாடாளுமன்றத்தில் பேசியவர். அது மட்டும் அல்ல, மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது தமிழ்ப் பிரதிநிதிகள் இடையே புதுடில்லியில் சுதர்சன நாச்சியப்பனின் அனுசரணையோடு ஏற்படுத்தப்பட்ட கூட்டத்தில் அதே மனப்பாங்குகளில் இருந்தவர்.

இவற்றைப் பற்றி முன்னைய பதிவுகளில் விரிவாக எழுதியமையால் இங்கு மீண்டும் நீட்டிக்கொள்ள விரும்பவில்லை.

இப்பொழுது 13 ஆம் திருத்த அடிப்படையில் அல்லது அதன் சாயலில் நிர்வாக அதிகாரங்களோடு தீர்வை ஏற்றுக் கொண்டு பயணிக்கலாம் என கூட்டமைப்பு அபிப்பிராயப்படுகிறது. நான் எனது பதிவுகளில் தொடர்ந்து எழுதியவாறும், செவ்விகளில் தெரிவித்தவாறும் இந்திய ஒப்பந்தத்தை ஏற்று, நடைமுறைப்படுத்த விடுதலைப் புலிகள் இணங்கி, செயற்பட்டு இருந்தால், தமிழ் மக்கள்பட்டஇவ்வளவுவேதனைகளையும் கண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிடப்பட்டு இருக்க மாட்டார்கள். ராஜீவ் காந்தியின் துன்பியல் சம்பவம் நடந்து, இந்திய மக்களின் கசப்புணர்வை சந்தித்திருக்க வேண்டி வந்திராது.

எனது அபிப்பிராயத்தில் அது அவர்கள் செய்த மாபெரும் தவறு.

விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்திற்கு தன்மானம், தேசிய உணர்வு என்று நியாயம் கற்பிக்கப்பட்டாலும், முள்ளிவாய்க்காலின் முடிவில் சம்பந்தன் அந்தப் பாதையை ராஜபக்ஷவுடன் பேசுவதில் இதுவரை கழித்தாரே ஒழிய, தமிழரசு – கூட்டமைப்பு – மற்றைய தமிழ்ப் பரப்புகள் என எல்லோரையும் ஒன்று கூட்டி, 13 அடிப்படையிலான தீர்வுக்காக ஒரு முறைதானும் இந்தியத் தூதுவருடன் தன்னும் அவர் பேசினார் அல்லர்.

அப்படியான ஓர் அரசியல் தரப்பைப் பிரதமர் மோடி பேச்சுக்குக் கூப்பிட்ட போது, பல காரணங்கள் தந்து தவிர்த்துக் கொண்டார். இவற்றைப் போரின் முடிவில் சர்வதேச அழுத்தங்களுடனும் இந்தியாவின் அனுசரணையுடனும் இயங்கி இருந்தால், தமிழ் மக்கள் எவ்வளவோ முன்னேறி இருக்கலாம்.

இன்றைய நடப்புகளில் கூட பிராந்திய, சர்வதேச நகர்வுகளைக் காணலாம். தமிழ்நாட்டின் கவர்னர் ரவி மாநில சபையில் மரபுக்குப் புறம்பாக பேசியவற்றின் எதிரொலி, பல மாதங்களாக சுமந்திரன் சந்திக்க முயன்றும் ஸ்டாலின் நேரம் தராது இழுத்தடிக்கப்பட்டது, இப்பொழுது தமிழ்நாட்டு அயலவர் தின நிகழ்விற்கு சுமந்திரனும் மனோகணேசனும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். சொல்ஹெய்ம் ரணிலுக்கும் ஸ்டாலினுக்கும் சுற்றுச்சூழல் காலநிலை அறிவுரையாளராக அமர்த்தப்பட்ட பின், 35 வருடங்களுக்குப் பின் ஸ்ரீலங்கா தூதுவர் ஒருவர் – அதுவும் மிலிந்த மொறகொட – ஸ்டாலின் கனிமொழியையும் மட்டுமல்ல, மற்ற தென் மாநில அரசியல் தலைவர்களையும் சந்தித்து, அமெரிக்க, சீன வல்லரசுப் போட்டிகளுக்கு இடையிலும் இந்தியா தனது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த எடுக்கும் சில விட்டுக்கொடுப்புகள், 13 ஆம் திருத்தத்தை விட்டுக் கொடுக்க இந்தியாவுடன் கோட்டாபய காலத்தில் பேச்சுக்கள் எடுக்கப்பட்டவை என இவைகளின் கோடுகளை இணைத்துப்பார்த்தால் உணரலாம்.


ஆனால் அவற்றுக்கு முன் சைவ – மிலிட்டரி ஹோட்டல்கார்கள் யாவருமே நம்பி இருக்கும் மனித உரிமை மன்று சர்வதேசம் அணுகும் பார்வைகளைப் பார்க்கலாம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# சுகநல நிலையத்துடனான உறவு - ஓர் அனுபவப் பகிர்வு

**இலக்கம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**




**அங்கம் - 02**

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்றர், யாழ்ப்பாணம்)**

### 1989ஆம் ஆண்டு - மூன்றாம் சந்திப்பு

திருச்சிலுவை சுகநல நிலையப் பணிகளில் மன திருப்தியும் விருப்பும் கொண்டு எனது இளைய சகோதரி ஆன் றெஜினா வினிபிறற் மரியாம்பிள்ளையை திருச் சிலுவை சுகநல நிலையத்தில் நேசிங் வேலைக்குச் சேர்க்கும் படி வேண்டினேன்.

அவர் சிலகாலம் வேலை செய்த பின்னர் நேசிங் பயிற்சிக்கு அனுப்பலாம் என்ற ஒப்பந்தத்துடன் ஏற்றனர். ஆனால் ஒரு 04 மாத காலத்தில் அவர் இங்கிலாந்து செல்ல விசா கிடைத்த படியால் வேலையை விட்டு விலகி இங்கிலாந்து சென்றார்.

இன்றும் அங்கிருந்து என்னுடன் கதைக்கும் போதெல்லாம் திருச்சிலுவைக் சுகநல நிலையம் பற்றி விசாரிக்க அவர் தவறுவதேயில்லை.

### 1992ஆம் ஆண்டு - நான்காம் சந்திப்பு

1992ஆம் ஆண்டு எனது தாய் தந்தையர் திரு திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை உடையார் அவர்களின் திருமணத்தின் 50 ஆவது நிறைவு ஆண்டு.

சிறிய ஒரு கொண்டாட்டம் வைப்போம் எனத் திட்டமிட்டிருந்தோம். அப்பாவிற்கு 82 வயதாகி இருந்தது. இருப்பினும் நன்றாகத்தான் இருந்தார். இருந்தாலும் திடீரென வருத்தமானார்.

நான் அப்போது கொழும்பில் இருந்தேன். அப்பாவின் சுகவீனம் பற்றி அறிந்து உடனடியாக வந்து திருச்சிலுவைச் சுகநல நிலையத்தில் சேர்ப்பித்தேன்.

அவரை வைத்திய நிலையத்தின் கீழ் மாடியில் மேல் மாடிக்கு ஏறும் படிக்கட்டுக்கு எதிர்ப்புறமாக இருந்த முதல் அறையில் தங்க வைத்தனர். உடன் அவரின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

அப்போது அரியாலையில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு சிஸ்ரர் இனிகாவும் சிஸ்ரர் கிளேயாவும் அப்பா அம்மாவின் 50ஆவது திருமண ஆண்டு நிறைவு தினத்திற்கு முதல் நாள் அவசரமாக வரும்படி ஆள் அனுப்பினார்.

நான் சென்ற போது நிலமை மோசமாகி இருந்தது. எனக்கு மிகவும் கவலையாகி விட்டது. காலம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த சிஸ்ரமார் 50 ஆவது ஆண்டு தினம் மட்டுமாவது அவர் இருக்க வேண்டும் என மிகுந்த கவனத்துடன் அவருக்கு அருகிலேயே நின்று கவனித்தனர். குடும்ப அங்கத்தவர்களும் சுற்றி நின்றோம்.

50 ஆவது ஆண்டு தினம் பிறந்து விட்டது. அப்பா, அம்மாவின் படத்துடன் பத்திரிகையில் நான் வெளியிட்ட 50ஆவது நிறைவு தின வாழ்த்து விளம்பரத்தை எப்படியோ ஒருவிதமாக அப்பாவை எழுப்பிக் காட்டினோம்.

எனக்கு முதற்சற்பிரசாதம் தந்த தார்சீசியஸ் சுவாமியைக் கூப்பிடேல்லையா என்று கேட்டார். பாதர் தார்சீசியஸ் பற்றி எனது தந்தையார் பல தடவைகள் கதைத்தமை எனக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

அதுதான் அவரின் இறுதி வார்த்தைகள்.

அதன் பின்னர் அவர் எதுவும் பேசவும் இல்லை. கண் திறந்து பார்க்கவும் இல்லை. இது நடந்த போது காலை 09 மணி இருக்கும். நாம் எல்லோரும் கவலையுடன் நின்றோம். இரண்டு நாள்களாக யாருக்கும் உணவு அருந்தும் மனமே இருக்கவில்லை.

சிஸ்ரர் இனிகாவும் சிஸ்ரர் கிளேயாவும் வேறு சில சிஸ்ரமாரும் (எல்லோரின் பெயர்களும் எனக்கு இப்போது ஞாபகம் வரவில்லை) வேகமாகச் செயற்பட்டு எமக்கு மதிய உணவு தயாரிப்பித்தனர்.

சுகநலநிலைய உணவுச்சாலையில் மதிய உணவு அருந்தினோம். அப்பா நல்ல வாழ்வு வாழ்ந்திட்டார். இதுதான் அவரின் 50ஆவது ஆண்டு நிறைவுச் சாப்பாடு என சிஸ்ரர் இனிகா சொன்ன அந்த வார்த்தைகள் எனக்கு இன்னும் ஞாபகமாய் உள்ளன.

நான்கு மணியளவில் பாதர் செல்வராஜா சுகநல நிலையத்திற்கு வந்தார். அப்பாவிற்கும் மிக இறுதியான நேரம் வந்து கொண்டிருந்தது. எனக்கும் அவருக்கு அருகில் நிற்கப் பயமாக இருந்தது.

பாதர் செல்வராஜா என்னிடம் வந்து இரண்டு நாளாய் இங்கு நிற்கிறீராம். கடவுள் சித்தம்தான் நடக்கும். அறை வீட்டுக்குப் போய் குளிச்சு முழுகி விட்டு வாரும் என்றார்.

நானும் இறுதி நேரத்தில் நிற்கப் பயந்தமையால் புறப்பட்டேன். 05 மணியளவில் நான் திரும்பி வரும் போது அவர் அமைதியில் இளைப்பாறி இருந்தார்.

### 1996ஆம் ஆண்டு ஐந்தாம் சந்திப்பு

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின் பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியைத் திரும்பவும் கொழும்புத்துறையில் ஆரம்பிக்கும்படி ஆயர் என்னைப் பணித்த படியால் நான் கிளிநொச்சியில் இருந்து கொழும்புத் துறை வந்து சிறிய குருமடத்தில் இருந்து கொழும்புத் துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான ஏழு மாணவர்களுடன் கல்விப் பணிகளை ஆரம்பித்தேன்.

இராணுவத்தினிடமிருந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை மீட்பதற்குப் புனித மாட்டீனார் குருமடத்தில் இருந்து ஆரம்ப மெய்யியல் பிரிவிற்கு தகுதிபெற்ற (1) இயேசுதாசன் மதி இளம்பருதி (2) அருளானந்தம் ஸ்ரீபன் (3) தார்சியஸ் நிரூபன் (4) ஈ.எஸ்.சி.மரியதாஸ் (5) நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி (6) எழில்ரஜன் (7) எம்.எல்.தயாகரன் ஆகிய 07 மாணவர்களுடன் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் ஆரம்ப மெய்யியல் பிரிவை ஆரம்பித்தேன். அவர்கள் எல்லோரும் இன்று குருக்களாகிப் பணி புரிகின்றனர்.

நான் அந்த 07 சகோதரர்களுடன் வளன்புரத்தில் குருத்துவப் பயிற்சி வாழ்வை ஆரம்பித்தோம். அமலமரித்தியாகிகளின் வளன்புரம் சிறிய குருமடத்தில் 07 மாணவர்களுடன் எட்வின் வசந்தராஜா அ.ம.தி அடிகளார் இருந்தார். எம்மையும் இராணுவத்தினரையும் விட அப்பகுதியில் யாரும் அப்போது இருக்கவில்லை.

நாள்கள் பல சென்றும் இராணுவத்தினர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேறாதபடியாலும் இராணுவத்தினர் இரவு வேளைகளில் வளன்புரத்தில் உள்ள எமது இல்லத்திற்கு வந்து தொல்லை தந்தபடியாலும் நாம் ஆயரின் அனுமதியுடன் வளன்புர இல்லத்தை விட்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இராணுவத்தினருடன் குடியமர்ந்தோம்.

புனித சவேரியார் கல்லூரியின் இறையியல் பகுதியில் நாம் இருந்தோம். புனித சவேரியார் கல்லூரியின் கல்லூரியின் மெய்யியல் பகுதியில் இராணுவத்தினர் இருந்தனர்.

இராணுவத்தினருடன் ஆரம்ப மெய்யியல் பிரிவினருடன் நான் சில காலம் தங்கியிருந்த இந்த செய்தி பெரிதும் அறியப்படாத ஆனால் உண்மைச் செய்தியாகும்.

இராணுவத்தினருடன் நாம் இருந்த நாள்களை மறக்கப்பட முடியாதவ்சி. பின்னர் ஆயர் இராணுவ மேலிடத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக அவர்கள் பகுதி பகுதியாக வெளியேறினார்கள்.

அதே காலப்பகுதியில் திருச்சிலுவை சுகநல நிலையமும் தனது நிலையத்தில் பணிகளை ஆரம்பித்திருந்தது. சிஸ்ரர் கிறேஸ் அன்ரனிப்பிள்ளை அப்போது அங்கு பொறுப்பாக இருந்து பணிகளை ஆரம்பித்திருந்தார்.

அப்போது வைத்திய நிலைய கடற்கரை வீதியைப் பாவிப்பது பயம் என்ற படியால் பின்புறமாக ஒரு பாதையை அமைக்க சிஸ்ரர் கிறேஸ் அன்ரனிப்பிள்ளை முற்பட்ட போது புனித சவேரியார் குருமடத்தின் இந்த அருட்சகோதரர்களுடன் அங்கு சென்று சில தினங்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு உதவி செய்த ஞாபகம் இப்போது வருகிறது.

### 2007ஆம் ஆண்டு - ஆறாம் சந்திப்பு

2008 – 2010 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசிலுடன் ஊடக கலாநிதி ஆய்வுக் கல்வியை இங்கிலாந்தில் மேற்கொள்ள

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -

எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அம்மாவைத் தனியே யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டுப் போக எனக்கு விருப்பம் இருக்கவில்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தந்த புலமைப் பரிசிலை விடவும் மனம் வரவில்லை.

நான் யாரிடம் சுகநல வழிகாட்டல் பெற முடியும். டொக்டர் சிஸ்ரர் இமாக்குளேற் யோசவ் அவர்கள் இங்கிலாந்தில் தம் தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

சிஸ்ரர் கிளேயாவை அணுகினேன். அம்மா 84 வயதாகி இருந்தார். அம்மா மெதுவாக நடந்து போகும் நிலையில் இருந்தாலும் அப்போது இருந்த விமானப் பயணம் வழி செய்வது பற்றி யோசிக்க வேண்டும் என சிஸ்ரர் கிளேயா வேறும் சில கன்னியரிடமும் கலந்தாலோசித்த பின்னர் தெரிவித்தார். நானும் என்ன செய்யலாம் என யோசித்துக் கொண்டு இருந்தேன்.

இரண்டு நாட்களின் பின்னர் எனது இக்கட்டான நிலையை கவனித்த சிஸ்ரர் கிளேயா சுவானி என்னிடம் நானே விமானத்தில் வருகிறேன் என்று உதவ முன்வந்தார்.

சிஸ்ரர் கிளேயா சுவானி – அம்மா திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை – என்னோடு துணையாக இருந்த ஸ்ரனிஸ்லோஸ் ஞானராஜ் மற்றும் சிறிகாந் ஆகியோருடன் நானும் விமான மூலம் கொழும்பை அடைந்தோம்.

நான் கேட்காமலே எனது நிலையை உணர்ந்து சிஸ்ரர் கிளேயா சுவானி அவர்கள் ஆற்றிய உதவி என்றுமே மறக்கப்பட முடியாத ஓர் உதவி ஆகும்.

(வளரும்...)












## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியடாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றன்.

தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்றுஅங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர் வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத் திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது.

அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டி ருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனா லும், அது தன் முயற்சியைக் கடைவிடா மல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் ‘‘இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந் தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்’’ என்று எண்ணினான் மறுபடியம் தன் எதிரியு டன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந் தித்தான். தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்றுசேர்த்துபலம்மிகுந்தஒருபடையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

## வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் பூச்செடிகள் எவை..?

**செம்பருத்தி:** செம்பருத்தி பற்றி நம் அனைவருக்குமே தெரியும். செம்பருத்தி செடி இல்லாத வீடுகளே இருக்க முடியாது. இது பல மருத்துவ குணங்களை கொண் டுள்ளது. அதுபோல செம்பருத்தி செடி அனைத்து பருவத்திலும் பூக்கள் பூக்கும் ஒரு பூச்செடி ஆகும்.



**பட் ரோஸ்:** பெரும்பாலும் இந்த செடி அனைத்து வீடுகளிலும் வளர்க்கப்படு கிறது. இது பார்ப்பதற்கு அழகாகவும், பல நிறங்களிலும் பூக்க கூடியது. இந்த செடி வளர்ப்பதற்கு உரம் தேவையில்லை. இந்த பட்ரோஸ் செடி மழை, வெயில் என்று அனைத்து பருவத்திலும் பூக்கள் தரக்கூடியது.



**செண்டுமல்லி:** இது பார்ப்பதற்கு செவ் வந்தி பூவை போல் இருக்கும். இதை செண்டு மல்லி என்று கூறுகிறார்கள். இது வருடம் முழுவதும் பூக்கள் தரக்கூடிய ஒரு பூச்செடி ஆகும். மஞ்சள் நிறத்தில் காணப்படும் செண்டு மல்லி அனைத்து பருவங்களிலும் பூக்க கூடியது.



**கோழி கொண்டை பூ:** பூக்களில் இது பார்ப்பதற்கு வித்தியாசமானதாக இருக் கும். இந்த கோழி கொண்டை பூ நறுமணம் இல்லாத பூ என்று சொல்லலாம். இதற்கு பூக்கும் பருவம் என்றெல்லாம் கிடையாது. இது வருடம் முழுவதும் பூக்க கூடிய ஒரு செடி ஆகும்.



**வாடாமல்லி:** வாடாமல்லி பூவை நாம் பார்த்திருப்போம். அது உருண்டை யாக முள் போன்ற தோற்றத்தில் இருக்கும். இதை எப்பொழுதும் வாடாத பூ என்று சொல்வார்கள். அதனால் தான் இதற்கு வாடாமல்லி என்ற பெயர் வந்தது. இது பூ மாலை கட்டவும் அலங்காரம் செய்வ தற்கும் பயன்படுகிறது. அதுபோல இந்த செடியில் பூக்கள் அனைத்து காலத்திலும் பூக்கின்றன.



## 1 டிரில்லியன் என்பது எத்தனை பில்லியன் தெரியுமா..?



ஒரு டிரில்லியன் என்றால் எத்தனை பில்லியன் என்பதை பற்றியும் ஒரு டிரில் லியனில் எத்தனை சைபர்கள் உள்ளது போன்ற தகவல்களை பற்றி தான் பார்க்க இருக்கின்றோம்.

பொதுவாக மேற்கத்திய எண்முறை யில் ஒரு டிரில்லியன் என்றால் ஓராயிரம் (1000) பில்லியன் ஆகும். ஒரு டிரில்லி யன் என்பது 1,000,000,000,000 என்று எண்மதிப்பில் எழுதப்படுகிறது.

அதாவது ஒன்றுக்கு பின் 12 சைபர்கள் இருக்கும்படி எண் மதிப்பில் எழுதலாம். அதாவது அறிவியல் முறையில் எழுதும் போது, ஒரு டிரில்லி யன் என்பது 1012 என எழுதப்படும்.

ஒரு டிரில்லியன் என்பது ஓராயிரம் மும் மடி ஆயிரம் ($1000 \times 1000^3$).

இதேபோல்குவாட் ரில்லியன் என்பது ஓராயிரம் நான்கு மடி ஆயிரம் ($1000 \times 1000^4$). அதே போல் குவின்ட்டில்லியன் என் பது ஓராயிரம் ஐந்துமடி ஆயிரம் ($1000 \times 1000^5$). இவ்வெண் முறையில் எண்களின் பெயர்கள் ஆயிரத்தின் பன்மடி களாக அடுக்கப்பட்டு பெயர்சூட்டப்பட் டுள்ளன. இந்த எண்களின் பெயரின் முன் வரக் கூடிய டிரி (Tri), குவார்ட் (Quart), குவின்ட் (Quint) என்பன மூன்று, நான்கு, ஐந்து ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

## நற்சிந்தனை துளிகள்

மற்றவரைப் பற்றி தவறாகப் பேச வேண்டாம். அவர்களிடமுள்ள நல்ல பண்புகளை மட்டும் பார்க்கப் பழகுங்கள்.

பற்களுக்கு இடையே நாக்கு கடிபடாமல் தப்புவது போல, தீயவர்களுடன் இருக்க நேர்ந்தாலும் ஒதுங்கி நில்லுங்கள்.

உலகம் நமக்கு நிரந்தரமானது அல்ல. வாழ்க்கைப் பயணம் முடியும் வரை தான் இங்கு நமக்கு வேலை.

உழைப்பினால் கிடைக்கும் பணமே சிறந்தது. அதில் உண்டாகும் மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தையில்லை.

எல்லாம் தெரிந்தவர் என்று ஒருவர் உலகில் யாரும் கிடையாது. ஒவ்வொரு வருக்கும் ஒருதிறமை இருக்கவே செய்யும்.

உங்களை நீங்களே புகழ்ந்து கொள்ள வேண்டாம்.

குளிர்ச்சி மிக்க இடத்தில் உடல் மட்டுமே குளிர்ச்சி அடையும். நேர்மையால் மட்டுமே உள்ளம் குளிர்ச்சி பெறும்.

வெறும் பேச்சால் பயனில்லை. செயல் மூலமாக மற்றவருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

பிறந்த நாட்டையும், பெற்ற தாயையும் நேசியுங்கள். அவர்களுக்காகத் தியாகமும் செய்யுங்கள்.

கடமையே கடவுள். அதற்காகப் பணி யாற்றுவதே வழிபாடு. வாழ்வில் ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் கடமை யாற்றுங்கள்.







# மூன்றாம் பிறை என்றால் என்ன தெரியுமா ?



சூரியனும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் அமைவு பெறும் ஒவ்வொரு அமாவாசைக்கு பிறகு வரும் மூன்றாம் நாளான துவிதை திதியில் வெளிப்படும் நிலவே மூன்றாம் பிறை எனப்படும்.

இந்நாளில் சந்திரபகவான் வழிபாடு சிறப்பாக இடம்பெறும். இதனை மூன்றாம் பிறை தரிசனம் அல்லது சந்திர தரிசனம் எனவும் அழைப்பர்.

விநாயகர், சிவபெருமான், பார்வதி தேவியார் போன்ற தெய்வங்கள் தமது தலையில் சூடி இருப்பதனால் இப்பிறையானது தெய்வீக சின்னமாகும்.

காமம், வெகுளி, மயக்கம் போன்ற மூன்று குணங்களையும் கடந்தவன் முக்தி அடையலாம் என்பதை நினைவுப் படுத்துவதற்காக இவ்வழிபாடு செய்தல் சிறந்தது என சித்தர்கள் கூறுகிறார்கள்.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சைவம் என அனைத்து மதங்களும் மூன்றாம் பிறையை தெய்வீக தன்மை பொருந்திய சின்னமாகவே கருதிப் போற்றுகின்றது. இந்த மூன்றாம் பிறையை வைத்து தான் 80 வயது நிறைவுற்றவர்களை ஆயிரம் பிறை கண்டவர் என்று அவருக்கு சதாபிஷேகம் செய்து கொண்டாடுகின்றனர்.

**புராணக் கதை**

ஒருமுறை தட்சணின் சாபத்தால், தனது பதினாறு கலைகளையும் இழந்த சந்திரபகவான், தனது கலைகளை மீண்டும் பெறுவதற்காக சிவனை நினைத்து தியானம் செய்தார்.

தட்சணின் சாபத்தால் உருகும் சந்திர பகவானின் தேகநிலை குறித்து மிகவும் வருத்தம் அடைந்த அவரது மனைவிமார் இருபத்தேழு நட்சத்திரங்களும் உடனே தங்களின் தந்தையாகிய தட்சணிடம் சென்று சாபவிமோசனம் அளிக்கும்படி வேண்டினர்.

தட்சனோ தனது அறியாமையால், அளித்த சாபத்தால் தனது புண்ணியம் அனைத்தும் குறைந்து விட்டது அதனால் தன்னால் இதற்கு ஏதும் செய்ய இயலாது என்று கூறினார். இறுதியில் இருபத்தேழு நட்சத்திர மனைவியரும் சந்திரனும் சிவனை நோக்கி தவம் புரிந்தனர்.

சந்திரனின் தவத்தை மெச்சிய சிவபெருமான் தன் தலையில் "மூன்றாம் பிறையாக" அமரும் பேறு பெற்றார்.

அதாவது சுறுசுறுப்போடு அதே நேரம் சிறுகச் சிறுக வளர்ந்தால் முழு பலனையும் அடைய முடியும் என்னும் கருத்தை வலியுறுத்துகிறது. இப்பிறையை தரிசிப்பதன் மூலம் சந்திரனும் சிவனதும் அனுக்கிரகத்தைப் பெறலாம்.

**மூன்றாம் பிறை யின் சிறப்புக் கதை**

திருவிளையாடற் புராணம் கூறும் பிட்டுக்கு மண் சுமந்த கதையில் அதாவது, "மதுரையில் உள்ள வைகையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய போது, அந்நாட்டு அரசன் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடி பங்கு பிரித்து அணையை கட்டி முடிக்க உத்தரவு இட் டான். அதன் படி நாட்டு மக்களும் தம் பங் குக்கு



உரியவற்றை கட்ட ஆரம்பித்த னர். அவ்வேளை அவ்வூரில் இருந்த மூதாட்டி ஒருவர் தம் பங்கினை எவ்வாறு கட்டுவது என்பதை அறியாது சிவனை நினைத்து மனமுருகி பிரார்த்தனை செய்தார். சிவபெருமானே அம் மூதாட்டிக்கு கூலியாளாக வந்து அணையை கட்ட உதவினார்."

இதில் சிவபெருமான் தன்னுடைய பணியாட்கள் எவரையும் அனுப்பாது தாமே அம்மூதாட்டிக்கு உதவி செய்வதற்கு கூலியாளாக வந்தமைக்கான காரணம், அம்மூதாட்டி தனது வாழ்நாளில் ஆயிரம் முறைக்கு மேல் மூன்றாம் பிறை தரிசனம் செய்தமையே ஆகும்.

இதிலிருந்து நாம் மூன்றாம் பிறை தரிசனத்தை மேற்கொண்டால் கஷ்ட காலங்களில் இறைவனே நேரடியாக வந்து உதவி புரிவார் என்று மூன்றாம் பிறை தரிசனத்தின் சிறப்பினை அறியலாம்.

**மூன்றாம் பிறை வழிபாடு**

மாதந்தோறும் வரும் அமாவாசைக்கு அடுத்த மூன்றாம் நாளான துவிதை திதியில் மூன்றாம் பிறை வழிபாடு செய்யப்படுகிறது. இந்நாளில் மாலை 6 தொடக்கம் 6.30 மணிக்குள் இவ்வழிபாடு செய்யப்படுகிறது. சந்திரனை சந்திக்கும் போது கையில் பணம் வைத்து மூடிக் கொண்டு வலமாக சுற்றி மீண்டும் ஒரு முறை பிறையை தரிசித்து வழிபடுவர்.

ஜனனகால லக்கினத்தின்படி நல்ல பலன்களை காண இயலவில்லை என்றால் சந்திரனை லக்கினமாக கொண்டு பலன் சொல்ல வேண்டும் என்ற விதி சோதிடத்தில் காணப்படுகிறது. ரோகிணி, அஸ்தம், திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சந்திர தரிசனம் வாழ்நாள் முழுவதும் செய்தால் வாழ்வில் சிறப்பு பெறுவார்கள். ஒருவருக்கு சந்திர தோஷம் இருக்குமாயின் மூன்றாம் பிறை நாளன்று விரதமிருந்து மாலையில் சந்திர தரிசனம் செய்ய வேண்டும். என கூறப்படுகிறது .

# கல்விக்கதிர்



- அகரன் -

## மண்வாசனை எப்படி உருவாகிறது?



நீண்ட நாட்கள் வறட்சிக்குப் பின், திடீரென வறண்ட நிலத்தில் புது மழை பெய்யும்போது தோன்றும் மனம் மயக்கும் மண்வாசனையை (Sweet Smell of Soil) விரும்பாதவர்கள் யாரும் இருக்க முடியாது! சரி! அந்த வாசனையில் சில நிமிடங்கள் மெய் மறக்கும் நீங்கள், எப்போதாவது அது எப்படித் தோன்றுகிறது என்று நினைத்ததுண்டா? இந்தக் கேள்வி நம்மில் பலருக்குத் தோன்றி இருக்கும் .


ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் இசபெல் ஜாய் பேர் (Isabel Joy Bear) மற்றும் ஆர்.ஜி. தாமஸ் (R.G. Thomas), வறட்சிக்குப் பின் வரும் புது மழையில் தோன்றும் மண்வாசனையைப் பற்றி ஆராய்ச்சி செய்தபோது, இந்த வாசனைக்குப் பெட்ரிக்கார் (Petrichor) எனப் பெயரிட்டனர். மண்வாசனை, மூன்று விதமான காரணங்களால் உருவாகிறது:

வறட்சிக் காலங்களில் சில தாவரங்கள், வறண்ட நிலத்தில் விதைகள் முளைத்து வீணாவதைத் தடுக்க, ஒரு விதமான எண்ணெயை வெளிவிடுகின்றன. மண்ணிலும், பாறைகளிலும் ஊறிக் கலந்து இருக்கும் இந்த எண்ணெய், மழை பெய்யும்போது, பலகூட்டுப் பொருட்களுடன் சேர்ந்து, காற்றில் கலந்து மணம் வீசுகிறது.

ஈரமான, வனப்பகுதிகளில், மண்ணில் வாழும் ஆக்டினோமைசேட்டிஸ் (Actinomycetes) எனும் ஒரு வகையான பாக்டீரியா, விதை மூலங்களை (Spores) வெளியிடும்போது, ஜியோஸ்மின் (ஜூளலிவிதுஷ்ஜ) எனப்படும் வேதிக்கூட்டுப் பொருளை சுரக்கின்றன. இந்தக் கூட்டுபொருள், மழை நீர் நிலத்தில் விழும் போது மண்ணிலிருந்து வெளிப்பட்டு, ஈரக்காற்றில் கலந்து மணம் வீசுகிறது.

இடி, மின்னலில் வெளியாகும் மின்னூட்டம் பெற்ற துகள்கள் வளிமண்டலத்தில் இருக்கும் ஆக்சிஜன் மற்றும் நைட்ரஜன் மூலக்கூறுகளிடையே வேதிவினையைத் தூண்டி, நைட்ரிக் ஆக்சைடை (NO) உருவாக்குகின்றன. இது வளிமண்டலத்தில் இருக்கும் வேதிப்பொருட்களுடன் வினை புரிந்து ஓசோன் (Ozone – O3) வாயுவை உருவாக்குகிறது; மழைக் காற்றுடன் கலந்து வரும் இந்த ஓசோன் வாயு, குளோரினின் மணத்தை நினைவூட்டக் கூடியது. எங்கிருந்தோ வரும் மழைக் காற்றில் கலந்து வரும் இந்த வாயுவினால் தான், மழை வருவதற்கு முன்பே, மழை மணத்தை நம்மால் உணரமுடிகிறது.

## மின்னோட்டம் என்பது என்ன?



இயற்கையில் மின்னல், நிலை மின்சாரம் (Static electricity), சூரியக் காற்று, துருவ ஒளி போன்றவற்றில் மின்னோட்டம் காணப்படுகிறது.

செயற்கையில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மின்சாரத்தைக் கொண்டு செல்லும் உலோகக் கம்பிகளில் இலத்திரன்களின் ஓட்டமாக மின்சாரம் காணப்படுகிறது.

மேலும், மின்னணுவியலில் பயனாகும் வெற்றிடக்குழாய், குறைக்கடத்திகள், மின்கலங்கள் போன்றவற்றிலும் மின்னோட்டம் காணப்படுகிறது.

மின்னோட்டத்தை அளவிடும் கருவி மின்னோட்டமானி எனப்படும். மின்னோட்டத்தில் நகரும் மின்னூட்டமானது மின் சுமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

மின்னோட்ட விதி ஒரு மின்சுற்றில் எந்தவொரு சந்திப்பிலும் சந்திக்கின்ற மின்னோட்டங்களின் குறியியல் கூட்டுத்தொகை சுழி ஆகும்.

ஒரு நொடிக்கு எவ்வளவு மின்னூட்டம் ஒரு குறுக்குவெட்டுப் பரப்பை கடக்கின்றது என்பதை பொறுத்து மின்னோட்டம் கணிக்கப்படும்.

மின்னோட்டத்தின் அளவு மற்றும் தர மதிப்பீடுகளுக்கு நவீன அறிவியல் மற்றும் தொழிநுட்பம் சில சட்டங்களையும், அளவுகளையும் பயன்படுத்துகின்றது. அந்த வகையில் முக்கிய சட்டங்களாக கூலம்பின் சட்டம், ஓம் விதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

18 ஆம் நூற்றாண்டின் 80களில் சார்லஸ் கூலம்ப் மின்னமுத்தத்தின் தோற்றத்தைத் தீர்மானித்தார். மற்றும் 19 ஆம் நூற்றாண்டின் 20 களில் ஜார்ஜ் ஓம் மின்சாரத்தின் தோற்றத்தைத் தீர்மானித்தார்.


இயற்கையிலும், மனித நாகரீகத்திலும் இது முக்கியமாக ஆற்றல் மற்றும் தகவல்களின் கோரியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மின்னோட்டத்தின் அலகு ஆம்பியர் ஆகும். (ஆம்பியர் என் பது ஒரு நொடிக்கு ஒரு குளம் அளவு மின்மம் மின்னூட்டம் ஒரு தளத்தைக் கடக்கும் ஓட்டம் ஆகும்.)

கடத்தியின் ஒரு பகுதியை மி காலத்தில் கடந்து செல்லும் மொத்த மின்னூட்டம் q என்றால், மின்னோட்டம் $I = q / t$ என்றாகும்.

**மின்னோட்டத்தின் வகைகள்**

மாறுதிசை மின்னோட்டம், நேர்திசை மின்னோட்டம் என இருவகையாக மின்னோட்டத்தின் வகைகள் பிரிக்கப்படுகின்றன.




மாறுதிசை மின்னோட்டம் - மின்தடையத்திலோ அல்லது மின் பொருளிலோ மின்னோட்டத்தின் திசை மாறி மாறி இயங்கினால் அது மாறுதிசை மின்னோட்டம் எனப்படும்.

வீடுகளில் பொதுவாகப் பயன்படும் மின்னாற்றல் மாறுமின்னோட்டமே. இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வீட்டு மின்னோட்டம் நொடிக்கு 50 முறை முன்னும் பின்னுமாய் அலையும்.

நேர்திசை மின்னோட்டம் - நேர்திசை மின்னோட்டம் அதன் திசையை மாற்றாது. கைபேசி, வானொலி, மின்விசைப் பலகை, மின்சார வாகனங்கள் போன்றவை நேர்திசை மின்னோட்டத்தைப் பயன்படுத்தி வேலை செய்யும் கருவிகள் ஆகும்.

# தரிசு நிலம்

பஞ்சபூதங்களில் ஒன்றான நிலமானது மனித வாழ்வில் இன்றியமையாததும், முக்கியமானதும், மனித வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது. இன்று இந்நிலங்களின் தன்மைக்கேற்ப பல வகைகளாகக் காணப்படுகின்றன.

எனினும் நம் முன்னோர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே நிலத்தை பாகுபாடு செய்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என நிலங்களை ஐவகையாகப் பிரித்துள்ளனர்.

தற்போது பல வகைகளில் நிலங்கள் பிரிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். உதாரணமாக தரிசு நிலம், கல்லாங்குத்து நிலம், செம்பாட்டு நிலம், மேச்சல் நிலம், வட்டகை நிலம், அறப்பு நிலம், இறையிலி, உழவுகாடு போன்ற பல நிலங்களைக் கூறலாம்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# கலை பொங்கல்



ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். இந்த திருநாள் அன்று அனைவரது வீட்டிலும் அந்த அறுவடையில் கிடைத்த புதிய அரிசியை சருக்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் பொங்கல் செய்து சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும். இந்த பொங்கல் அன்று கிராமங்களில் வெகுசிறப்பாக கொண்டாடி மகிழ்வார்கள்.

தமிழரை போற்றும் நன்னாள், உள்ள வரை போற்றும் பொன்னாள்.

உழைக்கும் மக்கள் தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், சூரியனுக்கும், கால்நடைகளுக்கும், தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் நாள் பொங்கல் திருநாள் ஆகும்.

பொங்கல் திருநாள் நான்கு நாட்கள் மிகவும் சிறப்பா கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகிப் பண்டிகை. இரண்டாம் நாள் தைப்பொங்கல். மூன்றாம் நாள் மாட்டு



பொங்கல். நான்காம் நாள் காணும் பொங்கல்.. முதல் நாள் போகிப்பண்டிகை பொங்கல் திருநாளின் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் வீட்டில் உள்ள பழைய பொருட்கள் மற்றும் தேவை இல்லாத பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீட்டினை சுத்தம் சேர்வார்கள். இரண்டாம் நாளான தை பொங்கல் அன்று புதுப்பானையில் பொங்கல் செய்து அதனை முதலில் கதிரவனுக்கு படைப்பார்கள். பின் குடும்பத்தினர் அனைவரும் உண்டு மகிழ்வார்கள்.

மூன்றாம் நாள் மாட்டு பொங்கல்: உழவு செய்வதற்கு பெரும் உதவியாக இருக்கும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் திருநாள் ஆகும். அன்றைய நாளில் மாடுகளை காட்டும் தொழுவதை சுத்தம் செய்து கால்நடைகளை குளிப்பாட்டி அலங்காரம் செய்து அந்த தொழுவத்திலேயே பொங்கல் செய்து கொண்டாடுவார்கள்.

நான்காம் நாள் காணும் பொங்கல்: இந்த பண்டிகை அன்று உற்றார், உறவினர், நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியவர்களின் ஆசி பெறுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற பாரதியார் கூற்றுப்படி பொங்கல் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்.

உழவன் இயற்கைக்கும், நாம் உழவனாக்கும் நன்றி தெரிவிக்கும் நன்னாளே பொங்கல் திருநாள்.

தமிழர் தம் மண்ணின் பெருமைக்கும் அவர்தம் மரபுக்கும் புகழ் சேர்க்கும் அற்புத திருநாள் இது.



# கலைக் கதிர்



## தமிழ் இலக்கியங்களில் 'திணை' என்பது

### இலக்கிய நயம்



**சென்றவார தொடர்ச்சி...**

4) தலைவன் தலைவியைக் காண இரவில் வந்து, அவன் வரும்போது அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் தலைவி தனித்து வாழாமல் தன்னை மாய்த்துக்கொள்வாள். எனவே, இரவில் வரவேண்டாம் என்பதை குரங்கின் காதலை உவமையாகக் கூறி விளக்குகிறார் கடுந்தோட் கரவீரன்.

'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சார னாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.'
–குறுந்தொகை

தோழி தலைவனை இரவில் வர வேண்டாம் என்று தடுப்பதற்காக, அவன் நாட்டுக் குரங்குகளின் இயல்பைக் கூறி நயமாகத் தெரிவிக்கிறாள்.

கரிய கண்ணையும், தாவுதலையும் உடைய ஆண் குரங்கு, தன் மந்தியிடம் தாவும்போது கீழே விழுந்து இறந்துபோனது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த அதன் இணையான பெண் குரங்கிற்கு ஆண்குரங்கு இன்றி தனித்து வாழ விருப்பம் இல்லை. எனவே, மரமேறுதல் முதலிய குரங்குகளின் அடிப்படைத் தொழிலை அறியாத தனது குட்டியை, சுற்றத்தாரிடம் பொறுப்பாக ஒப்படைத்து விட்டு, உயரமான மலைமேல் ஏறி அங்கிருந்து குதித்து தற்கொலை செய்துகொள்ளுமாம். அதுபோல தலைவன் தலைவியைக் காண இரவில் வந்து அவன் வரும்போது அவனுக்கு ஏதாவது நேர்ந்தால், தலைவி தனித்து வாழாமல் தன்னை மாய்த்துக்கொள்வாள்.

எனவே, இரவில் வரவேண்டாம் என்கிறாள் தோழி.

5) காதலில் தன்னால் எதுவும் செய்ய இயலாத கையறு நிலையில் தலைவன் இருப்பதை குறுந்தொகை உவமை அழகாக எடுத்துரைக்கிறது.

'இடிக்கும் கேளிர்! நும்குறை யாக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன்; தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய்;நோன்றுகொளற்
கரிதே!'
– குறுந்தொகை

என்னை இடித்துக் கூறும் நண்பனே! எனது குறையினை உமது குறையாகக் கருதி, அதனை முடிப்பாய் என்று எண்ணி இத்தனை நாளும் எனது உயிரைப் போகாது தடுத்து நிறுத்தினேன்.

எனது இவ்விருப்பத்தை நிறைவேற்றிவைப்பது தவிர எனக்கு நீ செய்யும் நன்மை வேறு ஒன்றும் இல்லை.

கதிரவன் வெயில் நன்றாகக் காய்கின்ற ஒரு பாறை. அதன்மேல் ஓர் இலையில் வெண்ணெய் வைக்கப்பட்டுள்ளது. அந்தப்பாறையின் பக்கத்தில் வெண்ணெயைக் காவல் காக்க ஒருவன் அமர்ந்திருக்கிறான்.

அவன் எத்தகையவன் என்று நினைக்கிறாய்? அவனுக்கு இரு கைகளும் இல்லை, ஊமையாதலால் வாயும் பேச முடியாது! தன் கண்களால் மட்டுமே பார்த்துக்கொண்டிருக்க முடியும்! வெயில் ஏற ஏறப் பாறையின் சூடு அதிகமாகியது.

அதன் மேலிருந்த வெண்ணெயும் உருகி ஓடி வழியத் தொடங்கியது! இந்நிலையில் அதைக் காவல் காப்பவன் என்ன பாடுபடுவான் என்பதை எண்ணிப் பார்! அவனால் வெண்ணெய் ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கத்தான் முடியுமே தவிர, அதனை எடுத்து வேறொரு இடத்தில் வைக்கவோ,யாரையேனும் அழைத்துக் கூறவோ முடியுமா? அவன் நிலையில்தான் நானும் இருக்கிறேன்! என் துயரைச் சொல்லவும் முடியாமல்,செயல்படவும் முடியாமல் தவிக்கிறேன்! என்று காதலில் தனது கையறு நிலையை தலைவன் கூறுவதாக வெள்ளி வீதியார் விளக்குகிறார்!

காதல் உயிரும் உடலும் போன்றது என்பது நிஜமாயினும்,இல்லை இல்லை அது சுரப்பிகளின் விளையாட்டுதான் என்பது உண்மையாயினும், காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் பெரும்பான்மை மனிதர்களின் பேரார்வம் நிறைந்த விருப்பமே!

இலக்கியச் சாளரம் கொண்டு காதல் வாழ்வை நோக்கும் போது, மனம் எனும் மாயக்கிடங்கிலிருந்து உற்பத்தியாகும் காதல் எனும் ஊற்று,பேரன்பு எனும் பேராழியாய் மனிதர்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை உணர முடியும்.

காதல் – கற்காலத்திலிருந்தே மனிதனால் கைக்கொள்ளப்பட்டு வரும் ஓர் இனிமையான உணர்வு! காலகாலத்திற்கும் மறக்க முடியாதவாறு மனித மரபணுக்களில் ஆழமாய் பொதிந்து கிடக்கும் அழகிய நினைவு!

ஒரு வேளை காதலைப் பெற்றோர்கள் ஏற்கவில்லை எனில், காதலர்கள் தங்களின் வீட்டை விட்டு வெளியேறி ஏதேனும் காவல் நிலையத்திலோ அல்லது நண்பர்களின் புடைசூழ ஏதேனும் கோயிலிலோ இன்று திருமணம் செய்கின்றனர். சங்க காலத்தில் காதலின் பொருட்டு ஒரு பெண் இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறுவதை 'உடன் போக்கு' என்று கூறினர்.

'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்
பிறப்புப் பிறிது ஆகுவதாயின்
மறக்குவேன் கொல் என் காதல் எனவே'

அதாவது, தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி, தன் தோழியிடம் 'நான் சாவதற்கு அஞ்சவில்லை; ஒரு வேளை நான் இறந்துவிட்டால் மறுபிறவியில் நான் பிறக்கக் கூடும். அவ்வாறு பிறக்கும்போது என் காதலனை மறந்து விடுவேனோ என்றுதான் அஞ்சுகிறேன்' என்று ஒரு நற்றிணை பாடல் ஒரு காதலின் ஆழம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் நாம் உச்சத்தைத் தொட்டாலும் மனித உயிர்கள் பரிணமிக்க அடிப்படை ஆதாரமாக இருக்கும் இது போன்ற உன்னதமான காதல் உணர்வுகளால்தான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. சங்க காலத்திலும் சரி இன்றைய காலத்திலும் சரி காதல் என்ற உணர்வு ஒன்றுதான். அதை வெளிப்படுத்தும் கருவிகள் மட்டுமே மாறியிருக்கின்றன.

காதல் என்பது ஒருவரின் மேல் ஏற்படும் அற்புதமான உணர்வு. அது காமம், மரியாதை, இனம் புரியாத ஈர்ப்பு, அவரின்பால் உள்ள நம்பிக்கை என்று எத்தனையோ கூறுகளை உள்ளடக்கியது.

பெண்களும் சரி, ஆண்களும் சரி அப்படிப்பட்ட காதல் உணர்வை பரஸ்பரம் நயமாக வெளிப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். ஒருவர் ஒரு முறை தீர்க்கமாக மறுத்து விட்டால் மீண்டும் மீண்டும் தன்னைக் காதலிக்க வற்புறுத்துவது அறியாமை. இதைச் சங்க இலக்கியத்தில் 'கைக்கிளை' (ஒருதலைக் காதல்) என்று கூறினர்.

அதே போல ஒருவர் தனக்குக் காதல் கடிதம் கொடுத்து விட்டாலோ அல்லது அவர்களின் காதலை வேறு விதமாக நயமாகச் சொன்னாலோ அந்தக் காதலை அவர் நம் மீது வைத்திருக்கும் அளவற்ற மரியாதையாக எண்ண வேண்டுமே ஒழிய அது தன் அழகுக்கோ திறமைக்கோ கிடைத்த உச்சபட்ச அங்கீகாரமாக எண்ணி மனதளவில் கர்வம் கொள்வது அதைவிட அறியாமை.

காதலை வெளிப்படுத்துவது எவ்வளவு நயமாக இருக்க வேண்டுமோ, அதைவிட காதலை மறுப்பதும், கோபப்படாமல் அதை ஏற்றுக் கொள்வதும் நயமாக இருப்பது முக்கியம்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 15th of January 2023



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


# Healthy food



Doctors tell us to eat more fruit and more vegetables. They tell us to drink more water and less fizzy drinks. But do we listen?? No, we continue to eat lots of junk food like pizzas, sweets, chips, cakes and biscuits.

We are what we eat. If we keep putting bad things into our bodies every day, like lots of fats and sugar, we will see bad things happen to our body. Unhealthy food makes your body unhealthy. When you get older you start to have a lot of problems like heart diseases. But most of us don't think much about the future. We only think about today. We only think that hamburgers taste better than salad. We think that the juice we buy from the supermarket is more delicious than the juice we make at home. Burgers, French fries and fizzy drinks may be delicious, but they haven't got enough vitamins and minerals. Your body needs vitamins and minerals to grow healthy. Healthy food gives our body the vitamins and the minerals it needs.

People eat junk food because it's tasty, but everybody can have a tasty meal at home. The only problem is that buying fresh products and cooking them takes time. And people prefer to spend time doing other activities, such as watching films, meeting friends, walking in the parks etc. I also like to do these activities, but I am very careful of my body. If you want to be healthy, you should eat healthy food every day.

*MATCH*

| | |
|---|---|
| 1. continue | ( ) illness like cancer and toothache. |
| 2. junk food | ( ) soft drinks like cola. |
| 3. fizzy drinks | ( ) to keep doing something. |
| 4. disease | ( ) fast food. |
| 5. taste | ( ) things in food that are useful for your body. |
| 6. tasty | ( ) the flavor of something. |
| 7. minerals | ( ) to like something more than other things. |
| 8. product | ( ) delicious |
| 9. prefer | ( ) something you make to sell. |

*2. Use (should or shouldn't) to make sentences about food:*

fizzy drinks - French fries - fruits - vegetables - burgers - pizzas - fresh juice - hot dogs

Eg - 1. I shouldn't eat French fries.

..........................................................

..........................................................

..........................................................



*3. Read the passage again and answer:*



1. Why do people eat junk food?

--------------------------------------------------------------------

2. What will happen if you eat junk food?

--------------------------------------------------------------------

3. What does your body need to grow healthy?

--------------------------------------------------------------------

4. What should you do if you want to be healthy?

--------------------------------------------------------------------

5. What activities do people prefer to do?

------------------------------------------------------

# The Milkmaid and Her Pail



Patty the Milkmaid was on her way to the market with a pail of milk on her head. She began calculating what she would do with the money she would receive for the milk as she went along.

"I'll get some quails from Farmer Brown, and they'll lay eggs every morning," she explained, "which I'll sell to the parson's wife."

I'll buy myself a new dress and a hat with the money I get from the sale of those eggs, and when I go to the market, won't all the young men come up to me and talk to me? Polly Shaw would be envious, but that shouldn't bother me. I'm simply going to stare at her and fling my head around like this. As she talked, she flung her head back, causing the pail to fall off its stand, spilling all of the milk! Scroll down to enjoy the next story with moral in English.

## **English is full of contradictions** *Here are some funny ones*



| | | |
|---|---|---|
| 1) Found Missing | 7) Pretty Ugly | 13) Foolish Wisdom |
| 2) Open Secret | 8) Seriously Funny | 14) Liquid Gas |
| 3) Small Crowd | 9) Only Choice | 15) Working Holiday |
| 4) Act Naturally | 10) Original Copies | 16) "Social Distancing" |
| 5) Clearly Misunderstood | 11) Exact Estimate | Forgot to mention... |
| 6) Fully Empty | 12) Tragic Comedy | Happily Married!! |

"konwledge isn't free. You have to pay attention"

# Read the following passage and Answer: the question that follows.





As soon as I tasted the prawn curry and chopped beans tossed with shredded coconut, I called the waitress and asked, "Does the chef look like me?" Wilting in Kerala's April heat, Bindhu, the waitress, thought I was mad. But she checked anyway, and returned to report no chance of my discovering a long lost cousing in the kitchen. Well, I could have sworn my mother cooked that prawn theeyal and long beans thoran.

I wondered if this, at last, might be the spot my grandparents left for Malaya more than a century ago. I returned from my first trip to India suitably ashamed for the years I had put off going. I learnt what it meant to be taken into the warm embrace of strangers when people would come up and say, "Your face is Malayalee, where are you from?" "Singapore," I would reply, and they would try again, "Before that? Your forefathers?". The link established, I became a brother instantly.

My wife and I chose the gentleness introduction to India, flying to Kerala, cruising the famed Backwaters on a houseboat and staying at a resort by wonderful Lake Vembanad. Still I did not count on people being so disarmingly friendly. On morning walks through the village behind our hotel, well–scrubbed kids were up and playing at 7 am, calling out, "How are you? What is your name?" Women washed pots and pans or whacked their laundry on the side of the fresh water canal. Men were waist–deep, going through their elaborate bath rituals.

A fisherman sporting the brightest grin told me his name was Thamby and displayed a meagre catch of small fish good for frying. His cheerfulness was hard for me to comprehend. On short car trips through small towns, I would catch myself wondering if my grandparents had come from this place or the one just gone by. I left the family mystery unsolved and headed for the hotel's ayurvedic centre. First they made me wear this skimpy thong. Then they dripped a ton of warm medicated oil on me and slathered it all over till I was slipping and sliding.

Next, two masseurs got to work simultaneously. I went back three days in a row. Since we got home, my wife has been casting muldly concerned looks in my direction, half expecting me to. break out in one of those dreamy Malayalam love songs we kept hearing everywhere. After a week in withdrawal, I called a number I found on the Internet and began telling the man on the telephone that I had just come back from Kerala and the ayurvedic massage had been very nice, but he would not let me finish.

Uttering a rude word, he attacked the commercialisation of ancient tradition in Kerala. To him, the nice massage was a trap for tourists. For the real thing, I would need at least an hour of consultation at his centre. He would decide what was wrong with me, prescribe the right medicines and diet and only if my ailments called for a massage, would he recommend the right sort. It was so much simpler in Kerala. I would just have to go back for more.

1. Which word in the first paragraph indicates clearly that the ingredients were finally sliced?

--------------------------------------------------------------------------------

2. Describe the weather in Kerala at that time.

--------------------------------------------------------------------------------

3. Where did the writer's grandparents emigrate to?

--------------------------------------------------------------------------------

4. How did the writer establish the link with the strangers he had met?

--------------------------------------------------------------------------------

5. In the third paragraph, who showed that they were friendly people?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

# Read the following passage and Answer: the question that follows.

"As you can see," the ferry captain said over his bullhorn, "a plane has crashed into the World Trade Centre." It was 8:48 and our commuter boat had just left Atlantic Highlands, New Jersey, for New York City. It was the kind of morning pilots call "severe clear". We could see the skyscrapers of lower Manhattan – still 40 minutes. away – with aching clarity. Like everyone else, I watched in horror as smoke spewed from the upper floors of the north tower. Metal strips that had encased the building began to unfurl like cans of tuna fish. Then it dawned on me: My brother, Michael, was somewhere inside that 110 storey building.

A week earlier, Mike had joined one of his best friends, Spike Tucker, or "Tuck' at Cantor Fitzgerald, an international brokerage firm. Before that, Mike had worked at Prudential Bache for 18 years. Mike and Tuck traded over–the–counter stocks and rode the same boat each morning, reaching their desks by 7:30 without fail. I knew they would be in their office, just did not know what floor it was on. I tried to phone Mike then his wife, Lynn and then my brother, Nick. No answer anywhere. Just as I looked up, a second plane sliced through the upper floors of the south tower.

Everyone gasped. That ruthless smack knocked the wind out of all of us. This was no accident. America, we realized, was under attack. Still we sailed on. We passed the Sandy Hook Lighthouse, the Statue of Liberty and Ellis Island, all eyes on those twin towers. Orange and yellow fireballs, the size of zeppelins, rang the other. We watched in disbelief as shards of glass and paper rained down on the streets below. I tried to imagine Mike and Tuck running down the stairs to safety. As we approached New York Harbour, the captain announced that no one could disembark. Instead, we would pick up those who had fled office buildings near the trade centre. Black soot and ash now cloaked much of the sky.

The smell of burning plastic and rubber soured the air. Already, thousands of people had crammed the pier. Knowing better, I looked for Mike's face in the crowd. As we headed back to Atlantic Highlands; I went up to the top deck. Lower Manhattan looked ghastly. However, nothing could prepare me for what came next: the collapse of the south tower. Within seconds it seemed, a huge swirl of ash and debris took down the once soaring skyscraper, changing a landscape I had known and loted since childhood.

1. What did the passengers on the ferry witness when they first set sail that morning?

--------------------------------------------------------------------------------

2. How do we know that the weather was fine that morning?

--------------------------------------------------------------------------------

3. Explain why the writer was sure that Mike was in the building when the incident occurred.

--------------------------------------------------------------------------------

4. What did the writer do when she realised her brother was in the building?

--------------------------------------------------------------------------------

5. Explain clearly how the writer knew that "this was no accident"?

# மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் சீருடைத் துணி விநியோகிக்கப்படும்


## கல்வி அமைச்சர் தகவல்



பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் இவ்வருடத்துக்கான சீருடைத் துணி எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த பாடசாலை சீருடைத் துணிக்கான தேவையில் 70 வீதத்தை பூர்த்தி செய்வதற்கு சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்து, அதனை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், சீனாவில் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட முதல் தொகுதி துணி கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# சுகவீனமடைந்த இலங்கைப் பெண் ஓமானில் திடீரென பரிதாபச் சாவு!

ஓமானில் திடீரென சுகவீனமடைந்த இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓமானில் சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மஹறவ, தலதாகம பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road, Kilinochchi**



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |